Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :205 ஆனி 07ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 21 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051




# இராணுவம் சூட்டு இளைஞன் சாவு!!!

- முகமாலையில் நேற்று மாலை சம்பவம்
- மக்கள் ஏ-9 வீதியை மறித்துப் போராட்டம்
- களவாக மணல் ஏற்றியோர் என்கிறது ராணுவம்
- சிப்பாய் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 21

முகமாலை காரைக்காடு குளப் பகுதியில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 24 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது. சட்டவிரோதமாக மணல் அகழ்ந்துவிட்டு குறித்த இளைஞர் தப்பிச் செல்லும்போது 15 >



## சூரிய கிரகணம் இன்று

வவுனியா, ஜூன் 21

இந்த ஆண்டுக்குரிய சூரிய கிரகணம் இன்று தென்படவுள்ளது. இலங்கையில் காலை 10.22 மணி முதல் பகல் 1.30 மணி வரையில் இதனை அவதானிக்க முடியும் என்று சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவசிறீ மயூரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சூரிய கிரகணத்தை நாம் வெற்றுக் கண்ணால் பார்க்கக் கூடாது. துணியை 10 >

## கொடியேற்றத்தில் அமைதியின்மை

யாழ்ப்பாணம், ஜூன் 21

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய பெருந் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கொரோனா அச்சம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுக்கே ஆலயத் திரு 10 >

## நான் அவனில்லை

*ஹெரோய்ன் சந்தேகநபர் நீதிமன்றில் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஹெரோய்னை யாழ்ப்பாணம் மாநகரில் இளைஞர்களுக்கு விநியோகித்து வந்த சந்தேகத்தில் 'பொம்மைவெளி டானியல்' என்ற நபரை யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்துள்ளனர். 09 >

## கடலட்டை பிடிப்புக்கு தேவாலயம் அனுமதி வழங்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 21

வெளிமாவட்டத்தவர்களில் ஒரு தொகுதியினர் கடலட்டை பிடிப்பதற்கு புனித உத்தரிய மாதா ஆலயம் அனுமதி வழங்கவில்லை என்றும், தமது சங்கமே அனுமதி வழங்கியதாகவும் குடாரப்பு கார்மேல் மாதா கடற்றொழில் அமைப்புத் தெரிவித்துள்ளது. 09 >

## இராணுவம் சுட்டதில் தவறில்லை

### பொலிஸ் பேச்சாளர் வக்காலத்து வாங்குகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 21

உழவு இயந்திரத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டு தப்பிச் சென்றவர்கள் மீது படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் தவறு இல்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

முகமாலையில் நேற்று மாலை சட்டவிரோதமாக மணல் ஏற்றச் சென்றதாக நம்பப்படும் உழவு இயந்திரத்தின் மீது 15 >

## இரு விசாரணைகள் நடக்கின்றன இப்போது எதுவுமே கூற முடியாது!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

முகமாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் இராணுவத்தின் விசாரணையும் பொலிஸ் விசாரணையும் நடக்கின்றன. எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் இப்போது எதுவுமே கூற முடியாது. இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க இது 15 >

## டிப்பர் - மோ.சைக்கிள் நேருக்கு நேர் மோதல்

## இளைஞர்கள் இருவர் பரிதாபமாக உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

கொடிகாமத்திலிருந்து பளை நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பரும், இயக்கச்சியிலிருந்து கொடிகாமம் நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் ஏ-9 வீதியில் உசன் சந்தைக்கு அருகில் 09 >



## படையினரைக் கொன்றால்தான் மொட்டில் தேசியப் பட்டியலா?

### கருணாவின் கருத்தை வைத்து போட்டுத் தாக்குகிறார் சஜித்

கொழும்பு, ஜூன் 21

ஆனையிறவில் ஒரே இரவில் 3 ஆயிரம் இராணுவத்தினரைக் கொலை செய்தோம் என்று கருணா அம்மான் வெளியிட்டுள்ள கருத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெறுவதற் 09 >

## ஆனையிறவுச் சமரில் நடந்தது என்ன?

### உண்மையைக் கண்டறிய ஆணைக்குழு அமைக்கக் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 21

ஆனையிறவு சமரில் உண்மையிலேயே என்ன நடந்தது என்று கருணா அம்மானிடம் விசாரணை நடத்தப்படவேண்டும். அந்தச் சமர் தொடர்பில் தகவல்கள் மறைக்கப்பட்டனவா, இதன் பின்னணி என்ன என்பதைக் கண்டறிவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நுவரெலியாவில் 10 >

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ 57,000/-

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

011 200 88 88

செலான் வங்கி



# சமூகஇடைவெளி பூச்சியம் முகக்கவசமும் இல்லை

## ஜனாதிபதியின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் இந்தநிலை



கொழும்பு, ஜூன் 21

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பிறந்த நாள் கொண்டாட்டம் நேற்று இடம்பெற்றது. விகாரைகளில் வழிபாடுகளுடன் நடைபெற்ற கொண்டாட்டத்தின் போது சமூக இடைவெளி பேணப்படவில்லை என்பதுடன், ஜனாதிபதி பல சந்தர்ப்பங்களில் முகக்கவசம் இன்றிக் காணப்பட்டார்.**

கோத்தாபயவின் பிறந்த நாளுக்கு ஆசீர்வாதம் வழங்கி, மிரிசவெட்டிய விகாரையில் நூறு தேரர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் விசேட அனுசாசன உரையை சங்கைக்குரிய ஈத்தலவெட்டுனு வெவே ஞானதிலக்க தேரர் ஆற்றினார்.

**வாழும் உரிமையை பெற்றுத் தந்தவர்**

நாட்டு மக்களுக்கு வாழும் உரிமையை பெற்றுக் கொடுத்த ஜனாதிபதி, பிரதமருக்கு நாட்டின் பாராட்டு உரித்துடையது. 30 வருட காலத்துக்கும் மேலாக இடம்பெற்று வந்த போரை இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவுக்குக் கொண்டு வந்து, பெரிய சிக்கலில் இருந்த நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த ஜனாதிபதி, பிரதமருக்கு நாட்டின் பாராட்டு உரித்தாகும்.

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு முன்னின்று செயற்படும் ஜனாதிபதியுடன் மகாசங்கத்தினர் அனைவரும் ஒன்றுசேர்ந்துள்ளனர். அதில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. திடமான கொள்கையுடன், எல்லாவகையிலும் முழுமையான ஜனாதிபதி ஒருவர் நாட்டிற்கு கிடைத்தது மாபெரும் அதிர்ஷ்டம், என்றார். (ஒ.5)

# மோதச் சென்ற 7பேரும் மாட்டினர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

நல்லூரில் இளைஞன் மீது தாக்குதல் நடத்தச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் மேலும் 5 இளைஞர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

நல்லூரில் இளைஞனைத் தாக்குவதற்காக அவரது வீடு தேடி இளைஞர்கள் 7 பேர் கொண்ட குழு மோட்டார் சைக்கிள்களில் நேற்றுமுன்தினம் பிற்பகல் சென்றது.

அதை அறிந்த இளைஞனின் மூத்த சகோதரன், இளைஞர்கள் குழுவை விரட்டிச் சென்றபோது, குழுவில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிலைகுலைந்து வீதியில் விபத்துக்குள்ளாகியது. இதன் போது இரண்டு பேர் சிக்கினர். அவர்கள் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் இராணுவத்தினர் சிறப்பு அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்தனர்.

இளைஞர்கள் இருவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் தப்பி ஓடிய மேலும் 5 பேர் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நல்லூர், அரியாலை மற்றும் ஓட்டுமடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ.ம)

# தரவன்கோட்டையில் பனங்காடு எரிந்தது

## *100 பனைகள் வரை நாசம்*

மன்னார் தரவன் கோட்டைப் பகுதியில் பனங்காடு நேற்றுக் காலை 11.30 மணியளவில் தீப்பற்றி எரிந்தது. 100 இற்கும் அதிகமான "பனை மரங்கள் மற்றும் வடலிகள் எரிந்து சாம்பராகியுள்ளன.

மன்னார் நகர சபை தீயணைப்பு பவுஸர் மூலம் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுத்தது. சமநேரத்தில் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் வவுனியாவிலிருந்து தீயணைப்பு வாகனத்தை வருவித்து தீயைக் கட்டுப்படுத்த உதவியது. எவ்வாறு தீ பரவியது என்பது கண்டறியப்படவில்லை.

'வவுனியாவிலிருந்து தீயணைப்பு வாகனம் வருவதற்குள் பல பனைகள் எரிந்து சாம்பராகின. மன்னார் மாவட்டத்துக்கு என்று தீயணைப்பு வாகனம் இருந்திருந்தால் பனை மரங்களை ஓரளவாவது காப்பாற்றியிருக்க முடியும்' என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ.5,213)

# முல்லைத்தீவில் பிடியை இறுக்கும் இராணுவம்

## ஐ.நாவின் விசேட அறிக்கையாளரின் குற்றச்சாட்டை உறுதிப்படுத்துகின்றது

முல்லைத்தீவு, ஜூன் 21


முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தற்போது இராணுவத்தினரால் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். முல்லைத்தீவு மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், சாலை உள்ளிட்ட கிராமங்கள் இராணுவத்தின் தீவிர கண்காணிப்பில் காணப்படுகின்றன.

மாத்தளன் சந்தியில் இணைகின்ற இரணைப்பாலை வீதி, பொக்கணைவீதி, மாத்தளன், மற்றும் சாலைக் கிராமங்களுக்கான வீதி ஆகிய மூன்று வீதிகளிலும் இராணுவத்தால் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

அதேவேளை இரட்டைவாய்க்காலில் இருந்து வலைஞர்மடம், பொக்கணை ஊடாக மாத்தளன் மற்றும் சாலை வரை செல்கின்ற வீதியின் ஆரம்ப முனையான இரட்டைவாய்க்கால் சந்தியில் (புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு) பிரதான வீதியில் சாலை வீதியின் இரு புறமும் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டு பலத்த கண்காணிப்பு நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். போர் முடிந்த பின்னரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கல் தொடர்வதாக ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் கிளமென்ற் இரண்டு தினங்களுக்கு முன்னர் அறிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.ஐ.246)



# முல்லைத்தீவில் போராட்டம் புலனாய்வுப் பிரிவு கண்காணிப்பு



முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள், தமது தொடர் போராட்டத்தின் ஆயிரத்து 200ஆவது நாளில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று நடத்தியுள்ளனர். இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள், தம்மிடம் தமது உறவினர்கள் கையளிக்கப்பட வேண்டும், சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கவனவீர்ப்பு இடம்பெறும் இடத்துக்கு மிக அதிகளவான புலனாய்வாளர்கள் வருகை தந்ததுடன், கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்களுக்கு மிக அருகில் சென்று அச்சுறுத்தும் வகையில் ஒளிப்படங்களை எடுத்தனர். (ஒ.ம.246)

## கருணாவின் கருத்துத் தொடர்பில் தேசப்பற்றாளர்களின் நிலைப்பாடு என்ன?

*கேள்வி எழுப்புகிறது ஜாதிக ஹெல உறுமய*

ஆயிரக் கணக்கான இராணுவத்தினரை கொன்று குவித்ததாக புலிகள் அமைப்பின் இரண்டாவது தளபதியாக இருந்த கருணா அறிவித்துள்ளார். அவரின் இந்தக் கருத்து தொடர்பில் தேசப்பற்றாளர்களின் நிலைப்பாடு என்ன? கோத்தாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக பாடுபட்ட தேசப்பற்றாளர்கள் எங்கே? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது ஜாதிக ஹெல உறுமய.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டு இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த வர்ணசிங்க மேலும் தெரிவித்தாவது:

போர்க் குற்றவாளியான கருணாவுக்கு மஹிந்த ராஜபக்ஷ இரண்டு தடவைகள் தேசியப் பட்டியல் வாய்ப்பை வழங்கினார். இம்முறையும் அழைப்பு விடுத்துள்ளார். எனவே, உண்மையான தேசப்பற்றாளர்கள் யார் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். போர்க் குற்றமிழைத்துள்ள கருணாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக உடனடியாக விசாரணை ஆரம்பிக்கப்படவேண்டும். குறிப்பாக புலிகள் அமைப்பின் தலைவர்களாக செயற்பட்டவர்கள் இருக்கின்றனர். குமரன் பத்மநாதனுடன் இவர்களுக்கு இருந்த கொடுக்கல், வாங்கல்கள் என்ன?, புலிகள் அமைப்பிடம் இருந்த சொத்துகளுக்கு என்ன நடந்தது?, அவை மீண்டும் யாரின் கைவசம் சென்றன?, கப்பல்கள் எங்கே?, நிதிக்கு நடைபெற்றது என்ன?, இவற்றின்மூலம் செல்வந்தர்கள் ஆனது யார்?, வியாபார வலையமைப்புக்கு என்ன நடந்தது? என்பவற்றை கண்டறிவதற்காக உடனடியாக சுயாதீனஆணைக்குழுவொன்று அமைக்கப்படவேண்டும் - என்றார். (ஒ,ம,44)

# விரைந்து போரை முடிக்க காட்டித் தந்தவர் கருணாவே

## ஆதரவுக் கரம் நீட்டுகிறார் அட்மிரல் சரத் வீரசேகர

**கொழும்பு, ஜூன் 21**

**போர்க் காலத்தில் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் இராணுவத்தினரை கொன்றதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் குறிப்பிட்டுள்ளமை ஒன்றும் பாரதூரமான விடயமல்ல. தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பான இரகசியத் தகவல்களை இவர் வழங்கியதன் காரணமாகவே போரை விரைவாக முடிவுக்கு கொண்டு வர முடிந்தது என்று அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில் இரண்டு தரப்பிலும் கொல்லப்பட்டார்கள். இராணுவத்தால் விடுதலைப் புலிகள் அமைப்பினர் போர்க் களத்தில் கொல்லப்பட்டார்கள். இராணுவத்தினருக்கு எதிராகவும் புலிகள் அமைப்பு பல்வேறு வழிமுறைகள் ஊடாக தாக்குதல்களை முன்னெடுத்தார்கள்.

போர்க் காலத்தில் கருணா அம்மான் கிழக்கு மாகாண படைத்தளபதியாகச் செயற்பட்டார். இதன்போதே இத்தாக்குதல் இடம் பெற்றிருக்கலாம். கருணா அம்மான் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகி இராணுவத்துக்கும், அரசுக்கும் ஒத்துழைப்பு வழங்கினார். இதன் பின்னரே இவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பில் இவர் பல்வேறு இரகசிய தகவல்களை அரசுக்கு வழங்கினார். இவர் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக்கொண்டே இறுதிக் கட்டப் போர் குறுகிய காலத்தில் நிறைவுக்குகொண்டு வரப்பட்டது.

இவர் குறிப்பிட்டுள்ள கருத்து இராணுவத்தில் உயிர்நீத்தவர்களின் உறவுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது. இவ்வாறான கருத்துக்களை குறிப்பிடுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். இறுதிக்கட்டப் போரை மிக விரைவில் நிறைவுக்கு கொண்டு வர வேண் டும் என்ற தேவை காணப்பட்டதால் இவரது உதவியை அப்போது பெற்றுக் கொண்டோம், என்றார். (ஒ,5)

## 3,000 இராணுவம் கொலை

# 'கருணாவின் ஒப்புதல்' வாக்கு மூலமாக கருதி சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்

## கோத்தா அரசை வலியுறுத்துகிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், ஜுன் 21

3 ஆயிரம் இராணுவத்தினரைக் கொன்று குவித்ததாகக் கருணா அம்மான் (விநாயகமூர்த்தி முரளிதரன்) கூறுவதை ஒப்புதல் வாக்கு மூலமாகக் கொண்டு அவருக்கு எதிரான நடவடிக்கையை கோத்தாபய அரசு எடுக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'3 ஆயிரம் இராணுவத்தைக் கொன்றொழித்த நான் கொரோனாவை விட ஆபத்தானவன் என்று கருணா அம்மான் கூறியுள்ளார். இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன' என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கருணா அம்மான் உண்மையைதான் சொல்லியுள்ளார். அவர் கொரோனாவை விட கொடூரமானவர்தான். 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களைக் கொன்று குவித்ததில், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்ததில் மிகக் கொடூரமாக செயற்பட்டவர் என்பது உண்மை. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ராஜபக்ஷக்களுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் திராணியில், தான் பெரிய வீரன் போன்று 3 ஆயிரம் இராணுவத்தைக் கொன்றதாகக் கருத்து வெளியிட்டுள்ளார். எந்தவித ஆதாரங்களும் இல்லாமல் பல அரசியல் கைதிகள் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்ற ஒன்றை மட்டும் அடிப்படையாக கொண்டு தண்டனை பெற்றிருக்கின்றார்கள். பல அரசியல் கைதிகள் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு அவர்களுக்கு எதிரான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொலிஸ் உயர் அதிகாரிகள் அல்லது சாதாரண பொலிஸ் அதிகாரிகள் தாங்கள் விரும்பியவாறு வாக்குமூலத்தை எழுதி, அரசியல் கைதிகளிடம் வற்புறுத்தி கையெழுத்து வாங்குவார்கள். இப்படித்தான் வழமையாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படும்.

அதில் என்ன எழுதி உள்ளது என்பது கூடத் தெரியாமல், பயத்தால் அரசியல் கைதிகள் கையெழுத்திடுவார்கள். அவர்கள் கையெழுத்திட்ட வாக்குமூலத்தை குற்ற ஒப்புதல் வாக்குமூலமாக மன்றில் சமர்ப்பித்து வழக்கு நடாத்தப்படும்.

அரசின் கைக்கூலியாக செயற்படும் கருணா அம்மான் உண்மையிலேயே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தெரிவித்திருக்கின்றார். அரசியல் கைதிகள் மீதான வழக்குகளிலும், அவர்கள் அங்கு குண்டுவைத்தார்கள், இங்கே இராணுவத்தைக் கொலை செய்தார்கள், கிளைமோர் வைத்தார்கள் என்றுதான் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றது.

3 ஆயிரத்தை இராணுவத்தைக் கொலை செய்தேன் கருணா அம்மான் மிகத் தெளிவாக சொல்லியுள்ளார். ஏன் அவர் மீது ராஜபக்ஷ அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றது. இதை குற்ற ஒப்புதல் வாக்குமூலமாக பதிவு செய்து கருணா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார். (ஒ,5,20)



## நாயால் விபத்து; மருத்துவர் காயம்!

சுன்னாகம், ஜூன் 21

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த மருத்துவர் ஒருவர் காயமடைந்தார். இந்த விபத்து சுன்னாகம் றொட்டியாலடிச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

விபத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே காயமடைந்தார். காயமடைந்த மருத்துவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ)

## வாழ்வாதார உதவி

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு விசுவமடு தொட்டியடி பகுதியில் வசித்துவரும் சிறப்புத் தேவையுடைய குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக நல்லின பசு மாடு கையளிக்கப்பட்டது.

நாட்டில் இடம்பெற்ற போரின் காரணமாக கணவன் இரண்டு கால்களை இழந்துள்ளார். மனைவி கண் ஒன்றை இழந்துள்ளார். எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி கைக்குழந்தை உட்பட மூன்று பிள்ளைகளுடன் வசித்துவரும் இக் குடும்பத்துக்கே வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது.

அதற்கான நிதியுதவியை பிரித்தானியாவில் இருந்து இயங்கிவரும் தமிழ்த் தொண்டு நிறுவனமான "எதிர்காலத் திற்கான பாதை" என்ற அமைப்பு வழங்கியிருந்தது. (ஐ-35)

## 200 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடு பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. "வன்னி வளத்துக்கான புதிய சந்தர்ப்பங்கள்" எனும் தொண்டு நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இந்த பொருள்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (ஐ-222)

## ரயில் மூலம் வடக்குக்கு மீண்டும் தபால் பொதி!

யாழ்ப்பாணம், ஜூன் 21

கடந்த மூன்று மாத காலத்தின் பின்னர் கொழும்பில் இருந்து முதற்தடவையாக வடக்குக்கான தபால் பொதிகள் தபால் ரயில் மூலம் எடுத்துவரப்பட்டன. 3 மாத இடைவெளிக்குப் பின்னர் தபால் ரயில் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் வந்தது. கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தபால்சேவைகள் பாதிக்கப்பட்டன. தற்போது ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியதை அடுத்து வடக்குக்கான தபால்கள், தபால் ரயில் மூலம் கட்டம் கட்டமாக எடுத்துவரப்படுகின்றன. (ஐ-17)

# அவசியமின்றி வரவேண்டாம்!

### வவுனியா மருத்துவமனை பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 21

**தற்போதைய சூழலில் பொதுமக்கள் அவசியம் இல்லாமல் மருத்துவமனைக்கு வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு மருத்துவமனைப் பணிப்பாளர் கே.நந்தகுமார் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொதுமக்கள் அவசிய தேவையில்லாமல் மருத்துவமனைக்கு வருவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். ஊரடங்கு முறைமை தளர்த்தப்பட்டிருந்தாலும், கொரோனோ வைரஸ் தாக்கம் முற்றாக அகலவில்லை. இந்நிலையில் மருத்துவமனை விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சைபெறும் நோயாளர்களைப் பார்வையிடுவதற்காக அவர்களது உறவினர்கள் அதிகமான அளவில் வருகை தருகின்றனர்.

இதனால் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால் அது அனைவருக்கும் விரைவாக பரவும் சூழல் ஏற்படும்.

அத்துடன் அதிகளவான பார்வையாளர்கள் வருகைதரும்போது, மருத்துவமனையின் காவலாளிகளுக்கும் அவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படும் சம்பவங்களும் உருவாகியுள்ளன.எனவே நிலைமையை கருத்தில் கொண்டு அவசியத்தேவையைத் தவிர ஏனையோர் மருத்துவமனைக்கு வருவதை முற்றாக தவிர்த்துக்கொள்வதுடன், வருகைதருவோர் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பேண வேண்டும் - என்றார். (ஐ-110)



தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலய இரதோற்சவம் நேற்று காலை 6 மணிக்கு பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ம)

## புலனாய்வு உத்தியோகத்தரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு

சாவகச்சேரி, ஜூன் 21

கடமை அறையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த தேசிய புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தரின் சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையிலுள்ள பிரேத அறைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

அம்பாறை, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பகுதியில் அமைந்துள்ள தேசிய புலனாய்வுப் பிரிவு காரியாலயத்தில், நேற்றுமுன்தினம் மாலை, 21 வயது மதிக்கத்தக்க புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர், தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டிருந்தார்.

சம்பவ இடத்துக்கு இரவு 9 மணியளவில், கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் தாஹா செய்னுதீன் சென்று, விசாரணைகளை மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து குறித்த சடலத்தை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு, பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டார்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் வடமராட்சி கரணவாய் மத்தி பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தரான கே.கமலராஜ் என்பவராவார். இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ப)

## தேர்தல் முறைப்பாடு நிலையம் அமைப்பு

மன்னார், ஜூன் 21

தேர்தல் தொடர்பாக முறையீடு செய்வதற்காக மன்னார் மாவட்ட செயலகத்தில் மத்திய முறைப்பாடு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை தொடக்கம் இந்த நிலையம் செயற்பட ஆரம்பித்துள்ளது.

முறைப்பாடுகளை 023.2223820 என்ற தொலைபேசி இலக்கத்துக்கும், 023.2223821 என்ற தொலைநகல் இலக்கத்துக்கும் தெரியப்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-60)

## வீதி விளக்குகளை அமைத்துத் தருக!

யாழ்ப்பாணம், ஜூன் 21

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய சுற்று வீதிக்கு வீதி விளக்குகளை அமைத்துத் தருமாறு யாழ். மாநாராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆலய பரிபாலன சபையினர் இது சம்பந்தமான மனுவொன்றை மாநகர பதில் முதல்வர் து.ஈசனிடம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கையளித்தனர்.

பரிபாலன சபையின் தலைவர் ஜெ.முத்துக்குமாரசாமி செயலாளர் என்.காண்டீபன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பதில் முதல்வரைச் சந்தித்து ஆலயத்தில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கேட்டுக்கொண்டனர்.

ஆலயத்தின் மகோற்சவம் ஜூலை மாதத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஆலய சுற்று வீதி சேதப்பட்டு உள்ளது.

சுவாமி தேரில் ஆரோகணித்து வீதி வலம் வரவுள்ளதால் குறித்த வீதியை சீரமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ம-17)

## விதிகளை மீறியவருக்கு 57, 500 ரூபா தண்டம்

சாவகச்சேரி, ஜூன் 21



போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தியவருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 57 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸ் நிலைய போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் வீதிச்சோதனையில் ஈடுபட்ட வேளையில் இலக்கத் தகடின்றி வந்த வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை காண்பித்துள்ளனர். வாகனம் நிறுத்தாமல் சென்றதால் துரத்திப் பிடித்து சோதனையிட்டனர்.

இதன்போது சாரதி மதுபோதையில் காணப்பட்டதுடன் சாரதிய அனுமதிப்பத்திரமும் அவரிடம் இருக்கவில்லை என்று தெரிவித்த பொலிஸார் சாரதிக்கு எதிராக, இலக்கத்தகடின்றி வாகனம் செலுத்தியமை , சாரதி அனுமதிப் பத்திரம் இன்மை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் பொலிஸாரின் சமிக்ஞையை மீறியமை ஆகிய குற்றச்சாட்டுக்களுடன் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதி. குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நான்கு குற்றங்களுக்குமென 57 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ப-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பின் தொடரும் புலனாய்வுக் கண்கள்

தமிழர் தாயகம் படையினரின் உடும்புப் பிடியிலேயே இன்னமும் இருக்கின்றது என்பதனை ஐ.நா. விசேட அறிக்கையாளர் கிளெமென்ற் நயாலெட்சோசி வோல் , ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்துள்ள வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். குளிரூட்டிகள் பொருத்தப்பட்ட அறைக்குள் இருந்தபடி இந்த அறிக்கையை அவர் தயாரிக்கவில்லை. மாறாக இலங்கை வந்து நிலைமைகளை ஆராய்ந்து, பார்த்து, கேட்டு தெளிந்த விடயங்களின் அடிப்படையில் இந்த அறிக்கையை அவர் பூர்த்தி செய்துள்ளார். எனவே வழக்கம்போல இந்த அறிக்கையும் கற்பனையாக இட்டுக்கட்டி எழுதப்பட்டது என்று இலங்கை அரசு கூக்குரலிடமுடியாது.

வெளிப்பார்வைக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத் தலையீடு இல்லாதது போலத் தோன்றினாலும் உண்மை நிலவரம் வேறு. போர் முடிவுற்ற பின்னரான 11 வருடங்களில் படையினர் தங்கள் பிரசன்னத்தை வேறுவகையில் வடிவமைத்துள்ளனர். பசுத்தோல் போர்த்திய நரி போல, அவர்கள் தங்கள் சீருடைகளைக் களைந்து சிவில் உடைகளோடு மக்களிடையே நடமாடத் தொடங்கிவிட்டனர். அதனால் படையினர் எம்மைக் கண்காணிக்கவில்லை என்ற எடுகோளில் மக்கள் இருப்பார்கள். ஆனால் உண்மையில் முன்னரை விடவும் இப்போதைய படைகளின் கண்ணுக்குத் தெரியாத ஊடுருவல்தான் மிக அபாயகரமானது. முன்னர் சீருடைகளோடு படைமுகாம்களிலோ, காவலரண்களிலோ, வீதியோர ரோந்துகளிலோ, சுற்றிவளைப்புகளிலோதான் படையினரைக் காணமுடியும். இப்போது அப்படியல்ல. எங்கும் இருக்கிறார்கள், ஆனால் சாதாரண கண்களுக்கு அது புலனாவதில்லை. அதனால் நாம் எப்போதும், எங்கும் கண்காணிக்கப்படுபவர்களாகவே இருப்போம்.

உதாரணமாக கொரோனா விடயம் நல்லதொரு உதாரணம். கொரோனாவால் ஒருவர் பாதிக்கப்பட்டவுடன் அவருடன் தொடர்புடையவர்களைக் கண்டறிய படைப்புலனாய்வுப்பிரிவே உதவி செய்தது. அதாவது கொரோனா நோயாளியின் தொலைபேசியின் சமிக்ஞையை வைத்து அவர் எங்கெல்லாம் போனார், யாரையெல்லாம் சந்தித்தார் என்ற விடயங்களை துல்லியமாகப் பெற்று அதன் மூலம் அவருடன் தொடர்புடையவர்கள் இனங்காணப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டார்கள். ஆனால் ஒருவரின் தொலைபேசிப் பரிவர்த்தனைக்குள் நுழையவேண்டுமாயின் அதற்கு நீதிமன்ற உத்தரவு அவசியம். அந்த நடைமுறையைத் தூக்கி வீசிவிட்டே படைப்புலனாய்வுத்துறை, தனிநபர் ஒருவரின் தொலைபேசி அலைவரிசையைப் பின் தொடரும் வேலையில் இறங்கியிருந்தது. இப்படி சந்தேகப்படுவோரின் தொலைபேசி அலைவரிசையை சட்டத்துக்கு முரணாக, வேவு பார்த்தல் என்பது ஏற்கனவே பழக்கப்பட்ட ஒன்றாக இருந்ததாலேயே படைப்புலனாய்வாளர்களால் , கொரோனா காலத்தில் அதை கூச்சநாச்சமின்றி இயல்பாகவும் துல்லியமாகவும் செய்யமுடிந்துள்ளது. ஆகவே ஒருவரின் அனுமதியில்லாமலே அவர் தொடர்பான சகல தகவல்களையும் உருவியெடுப்பதென்பது அப்பட்டமான மனித உரிமைமீறல். இதைப்போலவே ஏனைய பல வழிகளிலும் இராணுவக் கண்கள் மக்களைப் பின் தொடர்ந்தபடியே உள்ளன.

அதைவிடவும் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னரும், கொரோனாப் பரவலுக்குப் பின்னரும் மீண்டும் முளைத்த சோதனைச் சாவடிகளில் நவீன ஆயுதங்களை ஏந்திக்கொண்டு போருக்குத் தயாரானதைப் போல படையினர் பிரசன்னமானார்கள். இந்தச் சோதனைச் சாவடிகள் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் நீக்கப்பட்டபோதும், தமிழர் பகுதிகளில் இன்னமும் அவை உயிர்ப்போடே இருக்கின்றன. அதைவிட ஏதாவது நிகழ்வுகள், விழாக்கள், ஒன்றுகூடல்கள், கலந்துரையாடல்கள், ஜனநாயகப் போராட்டங்கள் என்பவற்றிலும் சிவில் உடைகளுடன் படைத்தரப்பு கண்காணித்தபடியே உள்ளது.

இந்த இரகசிய ஆக்கிரமிப்பை ஐ.நா அறிக்கையாளர் மிகச் சரியாக இனங்கண்டு, அதனை ஆதாரங்களோடு வெளிக்கொணர்ந்துள்ளார்.

கொரோனா பாதிப்பு, பொருளாதாரச் சரிவு, தேர்தல் குழப்பங்கள் என்று அல்லோலகல்லோலப்படும் இலங்கைக்கு இந்த அறிக்கை இன்னும் தாக்கத்தை உண்டுபண்ணவே செய்யும். இதைக் காரணம் காட்டி, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் இலங்கை மீது புதிய அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் கூடும். ஆனால் என்ன செய்தாலும் தமிழர்களை அடக்கி வைத்தே தீருவோம் என்று கங்கணம் கட்டும் ஆட்சியாளர்கள் இந்த அழுத்தங்களுக்குப் பணிவார்களா என்பதும் கேள்விக்குறியே. அவ்வாறு பணியாவிட்டால் நஷ்டம் நாட்டுமக்களுக்குத்தான், ஆட்சியாளர்களுக்கல்லவே.

# மன்னாரில் சில அரச திணைக்களங்கள் ஊழலின் உச்சத்தை அடைந்துள்ளன!

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

**மன்னார், ஜூன் 21**

**மன்னார் மாவட்டத்தில் மணல் அனுமதிப்பத்திரம் வழங்குவதில் பல்வேறு விதமான முறைகேடுகள் நடைபெறுகின்றன. மன்னாரில் சில அரச திணைக்களங்கள் ஊழலின் உச்சத்தை அடைந்துள்ளன என்று தெரிவித்து தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.**

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது:

மன்னார் மாவட்டத்தில் சில அரச திணைக்கள அதிகாரிகள் பகிரங்கமாக இலஞ்சம் பெறுகின்றார்கள். மணல் அனுமதிப்பத்திரம் வழங்குவதில் பல்வேறு விதமான முறைகேடுகள் இடம்பெறுகின்றன. மணல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக இலஞ்சம் கோரப்படுகின்றது. இந்த அதிகாரிகள் இலஞ்சம் பெற்றமைக்கான பல ஆதாரங்கள் உள்ளமையுடன் பலரின் ஒப்புதல் வாக்குமூலமும் எம்மிடம் உண்டு. கடற்றொழிலுக்கு மரம் வெட்டுவதிலும் மிக மோசமாக இலஞ்சம் பெறப்படுகின்றது.

சட்ட விரோத மணல் அகழ்வுக்குப் பொலிஸார் இலஞ்சம் பெறுவதுடன் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு டிப்பர் லோட் மணல் போய் சேருவதற்கு 5 ஆயிரம் தொடக்கம் 7 ஆயிரம் ரூபா வரைக்கும் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுக்கப்படுகின்றது. இலஞ்சம் பெறும் அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை எம்மால் சமர்ப்பிக்க முடியும். மணல் அனுமதிப்பத்திர விடயத்தில் தற்போது உள்ள முறைமை ஊழலுக்கு வழி ஏற்படுத்துகின்றது. இவ்விடயம் சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதிக்கும், ஏனைய பல அதிகாரிகளுக்கும் பல கடிதம் எழுதியும் எந்தப் பயனும் இல்லை. ஊழலை எல்லோரும் ஆதரிப்பதாகவே தெரிகின்றது - என்றுள்ளது. (ம-56)

## குறுஞ்செய்தி மூலம் பாலியல் தொல்லை

*வவு. இளைஞன் கைதாகி விடுவிப்பு*

வவுனியா, ஜுன் 21

இளம் குடும்பப் பெண் ஒருவருக்கு தொலைபேசியில் பாலியல் தொல்லை கொடுத்தார் என இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு, கடுமையான எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பப் பெண் ஒருவரது கைத்தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்ச்சியாக இளைஞர் ஒருவரால் குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு பாலியல் தொல்லை கொடுக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. குறித்த பெண்ணும், அவரது கணவரும் குறுஞ்செய்தி அனுப்பிய இளைஞன் வேலை செய்யும் அரச அலுவலகத்துக்குச் சென்று தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட பெண் வவுனியா பொலிஸ் நிலையத்தின் பெண்கள், சிறுவர் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார். முறைப்பாட்டையடுத்து குறுஞ்செய்தி மூலம் பாலியல் தொல்லைக் குற்றச்சாட்டில் இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கடுமையான எச்சரிக்கையின் பின் அவர் விடுவிக்கப்பட்டார். (ஐ-18)

## கோத்தாவுக்கு வயது 71

கொழும்பு, ஜுன் 21



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நேற்றுத் தனது 71ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். அவருக்கு அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய அதிகாரிகள் எனப் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, 1949ஆம் ஆண்டு ஜுன் மாதம் 20ஆம் திகதி பிறந்தார். இவர் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் கல்வி கற்றார். மேலும் 1971ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் இணைந்துகொண்டதுடன், சென்னை பல்கலைக் கழகத்தில் பாதுகாப்புக் கற்கை தொடர்பான பட்டம் பெற்றார்.

1991ஆம் ஆண்டு லெப்டினன் கேணலாக இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப நெறியைக் கற்று அமெரிக்காவுக்குச் சென்ற அவர், கலிபோர்னியா லொயெலா சட்ட பல்கலைக் கழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றினார்.

2005ஆம் ஆண்டு அவரது சகோதரரான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானதன் பின்னர், நாட்டின் பாதுகாப்புச் செயலராக பணியை ஆரம்பித்த கோத்தாபய, 2019 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், பொதுமக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்டு, 7ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாகத் தெரிவாகினார். (ம)

# கொரோனாத் தொற்றை இனங்காண கொழும்பு பல்கலை புதிய செயலி

கொழும்பு, ஜுன் 21

கொரோனாத் தொற்றாளர்களை இனங்காண, கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களால் அலைபேசி செயலி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக்கழக வானியல் பிரிவின் மாணவர்கள் சிலரால், இந்த புதிய சாதனம் கண்டுபிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த அலைபேசி செயலி ஊடாக கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை தொலைவில் வைத்தே இனங்காண முடியுமென அந்தப் பல்கலைக்கழக பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொதுமக்களுக்காக விமான நிலையம் திறக்கப்பட்ட பின்னர் கொரோனாத் தொற்றாளர்களை இனங்காணுவதற்காக இந்த செயலி ஊடாக பல செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது. இந்தச் செயலியை வேறு நாடுகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக, உலக சுகாதார நிறுவனத்திடம் ஒப்படைக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (ம)



## பாலம் அமைக்கவென உதயநகரில் அடிக்கல்

கிளிநொச்சி, ஜூன் 21
கிளிநொச்சி உதயநகர் கிழக்கு சிவன் கோவில் வீதியில் நிரந்தர கொங்கிறீட் பாலம் அமைக்கப்படவுள்ளது. அதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நேற்றுமுன்தினம் முற்பகல் 9 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெற்றது.
கரைச்சி பிரதேச சபையின் 9 லட்சத்து 45ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பாலம் அமைக்கப்படவுள்ளது.
நிகழ்வில் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் ஜீவராசா மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (த-35)

## புதுப்பிக்கப்படுகின்றன வீதி அடையாளங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 21
யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆளுகையிலுள்ள காப்பெட் வீதிகளில் வீதி விதிமுறை அடையாளங்களை சீர்செய்து வர்ணம் பூசும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.
குறிப்பாக கே.கே.எஸ் வீதி, பருத்தித்துறை பிரதான வீதி உட்பட பல இடங்களிலும் காப்பெட் வீதிகளில் வீதி விதிமுறை கோடுகள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. அவையே சீர்செய்யப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 250 கிலோ மீற்றர் நீளமான வீதி மற்றும் விதிமுறைக் கோடுகள் சீர் செய்யப்படவுள்ளன என்று அதிகார சபை தெரிவித்தது. (த-7)

### மன்னார் நகர சபை ஆளுகையிலுள்ள

# கடைகள் தொடர்பில் பலரும் விமர்சனங்கள்

### ஆராய 7 பேர் கொண்ட குழு அமைப்பு

**மன்னார், ஜூன் 21**
**மன்னார் நகர சபையால் வழங்கப்பட்ட கடைகள் தொடர்பாக தொடர்ச்சியாக கிடைக்கபெறும் முறைப்பாடுகளுக்கு அமைவாக சபை உறுப்பினர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை சபை அமர்வில் முன்வைத்தனர். அதனையடுத்து பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமான ஆராய்வுகளுக்காக சபையின் 7 உறுப்பினர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.**


மன்னார் நகர சபையின் 28 ஆவது அமர்வு அங்கு நகர முதல்வர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
மன்னார் பஸார் பகுதியில் உடைக்கப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு பதிலாக வழங்கப்பட்ட கடைத் தொகுதிகளில் சுமார் 8 கடைகளில் மாத்திரமே மன்னாரைச் சேர்ந்த வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.
ஏனைய கடைகளை வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகளே பெற்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று மன்னார் நகர சபை உறுப்பினர் ஜோசப் தர்மன் குற்றச்சாட்டு முன்வைத்தார்.
ஒரு சில அதிகாரிகளின் செயற்பாட்டால் மன்னார் நகர சபைக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.
எனவே, மன்னார் நகர சபையால் வழங்கப்படும் வர்த்தக நிலையங்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கப்படவேண்டும் என சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
எனினும், வழங்கப்பட்ட கடைகள் பல தென்பகுதியைச் சேர்ந்த பலருக்கு கைமாற்றப்பட்டு வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. எனவே குறித்த நடவடிக்கை



தொடர்பாக நகர சபை முழுமையாக ஆராயவேண்டும் என்று உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் கோரினார்.
மேலும் மன்னார் பஸார் பகுதியில் பல வருடங்களாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்ட பலருக்கு இன்னும் கடைகள் ஒதுக்கி கொடுக்கப்படவில்லை. இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது. எனவே பாதிக்கப்பட்ட மன்னாரைச் சேர்ந்த வியாபாரிகளுக்கு கடைகளை அமைத்துக்கொடுக்க நகர சபை நடவடிக்கைளை முன்னெடுக்க வேண்டும் என்று உறுப்பினர் உவைஸ் ஹர்னி கோரிக்கை விடுத்தார்.
வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கடந்த காலங்களைப்போன்று தற்போதும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தவர்கள் பலர் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.
எனவே, தற்போது வழங்கப்பட்டுள்ள கடைகள் தொடர்பாக நகர சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கைமாறப்பட்ட கடைகள் அனைத்தையும் மன்னார் நகர சபை மீளப்பெற்று மன்னாரைச் சேர்ந்த கடைகள் இல்லாதவர்களுக்கு வழங்க வேண்டும் என்று உறுப்பினர் மைக்கல்கொலின் கோரிக்கை விடுத்தார்.
இதனையடுத்தே மன்னார் நகர சபை உறுப்பினர்கள் 7 பேர் அடங்கிய விசேட குழு ஒன்றை நியமித்தார் முதல்வர்.
அந்தக் குழுவினர் மன்னார் நகர சபையால் வழங்கப்பட்ட கடைகள் தொடர்பாக தனித்தனியாக ஆராய்ந்து அந்தக் கடையின் உரிமையாளர் குறித்த கடையை நடத்துகின்றாரா? அல்லது பிறிதொரு நபர் நடத்துகின்றாரா என ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் பணித்தார். (த-56)

# 'கூட்டுறவின் அரவணைப்பு' கடன் ரூ.60,000 ஆக அதிகரிப்பு

'கூட்டுறவின் அரவணைப்பு' கடன் திட்டம் 60 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 50 ஆயிரம் ரூபாவாக இருந்த கடன்திட்டமே கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமைச்சரவை அனுமதியுடன் 60 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்தது.
வடக்கு மாகாணத்தில் நுண் நிதி நிறுவனங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக 2018 ஐப்பசி மாதத்திலிருந்து 'கூட்டுறவின் அரவணைப்பு' கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.
புதிய நடைமுறைகளின்படி இந்தக் கடன் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ள பயனாளி ஒருவர் 60 ஆயிரம் ரூபா கடன்பெற முடியும்.
இந்தக் கடனுக்கான ஆண்டு வட்டி வீதம் 14 வீதத்திலிருந்து ஒன்பது வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. வட்டி வீதம் குறைந்து செல்லும் மீதியின் அடிப்படையிலேயே கணிக்கப்பட்டுள்ளது.
இதுவரை 437.4 மில்லியன் ரூபா கடன் சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு சுமார் முப்பது ஆயிரத்து 925 பேர் வரையிலானோர் கடன்களைப் பெற்றுள்ளனர்.
எந்தவித ஆதனப் பிணைகளுமின்றி குறித்த கூட்டுறவுச் சங்கங்களில் ஓர் அங்கத்தவராக இணைந்து இருவரின் ஆள் பிணைகளுடன் இந்தக் கடன் வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.
வடக்கு மாகாணத்தில் கூடுதலாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு இந்தக் கடன் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.
அதிக வட்டி அறவிடும் நுண்நிதி நிறுவனங்களின் கடன்பொறியிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக கூட்டுறவு நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படும் இந்த 'கூட்டுறவின் அரவணைப்புக் கடன் திட்டம்' வறிய மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமே.
இந்தக் கடன் திட்டத்தில் இணைவோர் தமது பிரதேச கூட்டுறவு சங்கங்களில் ஓர் அங்கத்தவராக இணைவதன் ஊடாக இந்தக்கடன் திட்டத்தைப் பெற்று நன்மையடைய முடியும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-17)



## தீயணைப்பு வீரருக்கு வளாகத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 21
யாழ்ப்பாண மாநகரசபை தீயணைப்பு வீரர் அ.சகாயராசாவின் இறுதி அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாண மாநகர தீயணைப்பு படைப்பிரிவில் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
மாநகர சபையின் பதில் முதல்வர் து.ஈசன் உட்பட பலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர். இதில் மாநகர சபையின் உறுப்பினர்கள், விடுமுறையில் உள்ள முதல்வர் இமானுவேல் ஆனல்ட், மாநகர சபையின் நிர்வாக அதிகாரிகள், அலுவலர்கள், தீயணைப்புப் படை அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (த-20)

# குடிதண்ணீர் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுங்கள்!

## மாத்தளன் கிராம மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜூன் 21**

**முல்லைத்தீவு புதுமாத்தளன், மற்றும் பழையமாத்தளன் மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.**

முக்கியமாக அந்தப் பகுதிகளில் காணப்படும் கிணறுகள் அனைத்தும் உவர்நீரைக் கொண்டதாகக் காணப்படுகின்றன. அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள், புதுமாத்தளன் பகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு மிகச் சிறிய கிணற்றிலிருந்தே குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்கின்றனர். நீண்ட தூரங்களிலிருந்து கால்நடையாகவும், மோட்டார் சைக்கிள் மற்றும், மிதிவண்டிகளிலும் வந்து பலத்த சிரமங்களுக்குமத்தியில், மக்கள் குறித்த கிணற்றிலிருந்து தண்ணீரைப் பெற்றுக்கொள்கின்றனர்.

மிகச்சிறிய அளவிலான கிணற்றிலிருந்து, அப்பகுதியில் வாழ்கின்ற நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நீரைப் பெறுவதால், கிணற்று நீர் வற்றிச் செல்லும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே தாம் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில், எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு, உரியவர்கள் குடிதண்ணீர் வசதியைத் தமக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-246)

# மன்.குஞ்சுக்குளம் மக்கள் தண்ணீர் இன்றி அவதி!

மன்னார், ஜூன் 21

மன்னார் நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட குஞ்சுக்குளம் மற்றும் பெரிய முறிப்பு கிராமத்து மக்கள், தாம் குடிதண்ணீர் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளோம் என்று முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக கிணறுகளில் நீர் மட்டம் ஆழத்துக்குச் சென்றுவிட்டது. கிராமங்களில் அமைக்கப்பட்ட பொதுக் கிணறுகளில் நீண்ட தூரம் சென்றே குடிதண்ணீர் எடுத்து வரும் நிலை உள்ளது. முன்பு நானாட்டான் பிரதேச சபையால் வைக்கப்பட்ட தண்ணீர் தாங்கிகளில் குடிதண்ணீர் பவுஸர்கள் மூலம் தண்ணீர் நிரப்பப்பட்டு வந்தது. தற்போது அவை நிறுத்தப்பட்டுள்ளன.

எனவே மக்களின் குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (ம-213)

# மாடுகளை சட்டவிரோதமாக இறைச்சியாக்கியோர் கைது

## 3 மாடுகள், 2 ஆடுகளும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். நாவாந்துறைப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமான முறையில் மாடுகளை இறைச்சியாக்கிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் சட்டவிரோதமாக மாடுகள், ஆடுகள் என்பன இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன என்று அந்தப் பகுதி பொதுமக்களால் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அந்தப் பகுதியை இன்று காலை முற்றுகையிட்டனர். இதன்போதே மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டனர். அத்துடன் 520 கிலோகிராம் மாட்டு இறைச்சி மீட்கப்பட்டதுடன் இறைச்சியாக்குவதற்காகக் கட்டப்பட்டிருந்த 3 மாடுகள், 2 ஆடுகள் என்பனவும் மீட்கப்பட்டன. (ம-20)

# சட்டவிரோத கட்டடங்கள் நல்லூரில் இடிக்கப்படும்

## பிரதேச சபைத் தவிசாளர் அறிவிப்பு


யாழ்ப்பாணம், ஜூன் 21

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடத்தை இடித்தழிக்குமாறு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய நாளை திங்கட்கிழமை குறித்த கட்டடம் இடிக்கப்படவுள்ளது என்று சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள அரசடி வீதி திருநெல்வேலி கிழக்கு பகுதியில் சபையின் எவ்வித அனுமதியும் எடுக்காது கட்டடம் ஒன்று கட்டப்பட்டது.

குறித்த கட்டடத்துக்கு உரிய அனுமதியைப் பெறுமாறு சபையினால் பலமுறை அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. எனினும் குறித்த கட்டட உரிமையாளர் சபையிடம் இருந்து எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டடத்தைக் கட்டியுள்ளார். இதனால் சபையினால் கடந்த வருடம் குறித்த கட்டடத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில் சட்ட விரோதமாக சபையின் அனுமதி இன்றிக் கட்டப்பட்ட கட்டடத்தை இடித்து அழிக்குமாறு நீதிமன்றத்தால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக குறித்த கட்டடம் நாளை திங்கட்கிழமை இடித்து அழிக்கப்படும் -என்றார். (ப-20)



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 16 நாள்கள் திருவிழா நடைபெறும்.

# உயிரிழந்த தொழிலாளியின் குடும்பத்துக்கு நிதி உதவி

வவுனியா, ஜூன் 21

வவுனியாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்பரல் மாதம் கொள்கலன் சுத்திகரிப்பின்போது விஷவாயு தாக்கி உயிரிழந்த நான்கு தொழிலாளிகளில் ஒருவரின் குடும்பத்துக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. வவுனியா அண்ணாநகரைச் சேர்ந்த சந்தனசாமியின் குடும்பத்துக்கே இவ்வாறு உதவி வழங்கப்பட்டது. அவருடைய வீட்டு வேலைகளை முடிப்பதற்காக அந்த உதவி வழங்கப்பட்டது.

நிதி உதவி கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகரும் நயினையைச் சேர்ந்த சமூகத் தொண்டருமான காலஞ்சென்ற செல்லையா சந்திரசேகரத்தின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவர்களது பிள்ளைகளான தீசன் குடும்பத்தினரால் வழங்கப்பட்டது. வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ் . சந்திரகுமார் மற்றும் ஆசிரியை திருமதி ரூபா ஆகியோர் அந்த நிதியை உயிரிழந்த தொழிலாளியின் மனைவியிடம் நேற்று கையளித்தனர். (ப-110)



# முட்டி மோதுகின்றன கையும், மொட்டும்!

*தயாசிறி மீது எஸ்.பி. கடும் தாக்கு!*



கொழும்பு, ஜூன் 21

'குருநாகல் மாவட்டத்தில் மொட்டு சின்னத்தில் போட்டியிடும் தயாசிறி ஜயசேகர, நுவரெலியா மாவட்டத்துக்கு வந்து 'கை' சின்னத்துக்கு வாக்களிக்குமாறு மக்களிடம் கோருவது வெட்கக்கேடான செயலாகும்' என்று பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் எஸ்.பி.திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்கள் முன்னணி நுவரெலியா மாவட்டத்தில் சுதந்திரக்கட்சிக்கு அநீதி இழைத்துவிட்டது என நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் சு.கவின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியிருந்தார்.


இந்த நிலையில் இது தொடர்பில் எஸ்.பி.திஸாநாயக்கவிடம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் வினவியபோது அவர் தெரிவித்ததாவது:

சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் குருநாகல் மாவட்டத்தில் மொட்டு அணியில் போட்டியிடுகின்றனர். தயாசிறி ஜயசேகரவும் அந்த பட்டியலில் இருக்கின்றார். அங்கு மொட்டு சின்னத்தை ஆதரிக்கும் அவர், நுவரெலியாவுக்கு வந்து, சுதந்திரக்கட்சியின் 'கை'சின்னத்துக்கு வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றார்.

அவர் ஆடை அணிந்துகொண்டா இவ்வாறு உரையாற்றுகிறார் என கேட்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்திலுள்ள 8 ஆசனங்களில் ஐந்தை பொதுமக்கள் முன்னணி இம்முறை கைப்பற்றும். ஐக்கிய தேசியக்கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதால் அந்த எண்ணிக்கை 6ஆக கூட மாறலாம்.' - என்றார்.

அதேவேளை, மைத்திரி பக்கம் உள்ள உறுப்பினர்களுக்கு வாக்களிக்கக்கூடாது என பிரசன்ன ரணதுங்க அண்மையில் குறிப்பிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-44)

# உலகக்கிண்ணத்தில் சூதாட்டமா?




## முழுமையான விசாரணை கோருகின்றார் அநுரகுமார

**கொழும்பு, ஜூன் 21**

**2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் ஆட்டநிர்ணயச் சூதாட்டம் இடம்பெற்றுள்ளது என்று மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் அநுரகுமார திஸநாயக்க.**

2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் ஆட்டநிர்ணய சதி இடம்பெற்றுள்ளது என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வெளியிட்டுள்ள கருத்தானது தேசிய ரீதியில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், மஹிந்தானந்த அளுத்கமகேயின் குற்றச்சாட்டு தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ உடனடியாக விசாரணையை ஆரம்பிக்கவேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

'2011ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக்கிண்ண இறுதிப்போட்டியை பார்வையிட அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சர் ஆகியோரும் சென்றிருந்தனர். எனவே, இந்த குற்றச்சாட்டு பாரதூரமானது. அது தொடர்பில் அரசு நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.' என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-44)



# 95,000 பேருக்கு பி.சி.ஆர். சோதனை

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகள் எண்ணிக்கை 95 ஆயிரத்தை நெருங்கியுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாத்திரம் தொற்றுநோயியல் பணியகத்தினால் ஆயிரத்து 495 பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தவகையில் கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதிமுதல் இதுவரை 94 ஆயிரத்து 260 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம)

## அரசியல்சார் அமைப்பு உதயம்

திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள், இன்னாள் மக்கள் பிரதிநிதிகளையும் நேரடியாகத் தேர்தல் அரசியலில் ஈடுபட்ட வேட்பாளர்களையும் சமூக ஆர்வலர்களையும் புத்திஜீவிகளையும் ஒன்றிணைத்த அரசியல் சார் அமைப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது."அகில இலங்கை ஐக்கிய மக்கள் அமையம்" என்ற பெயரில் அந்த அமைப்பு திருகோண மலையில் நேற்றுமுன் தினம் மாலை ஆரம்பிக்கப்பட்டது.(ப)

# கருணாவின் அறிவிப்புக்கு கோத்தாவின் பதில் என்ன?

## உடன் அறிவிக்குமாறு ஜே.வி.பி. வலியுறுத்து

'ராஜபக்ஷ அணியிலுள்ளவர்கள் போலியான தேசப்பற்றாளர்கள் என்பது கருணாவின் கருத்துமூலம் உறுதியாகிவிட்டது. ஆயிரக்கணக்கான இராணுவத்தினரை படுகொலை செய்தார் எனக் கருணா ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே, இது தொடர்பில் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்' என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார். இது தொடர்பில் அநுர மேலும் தெரிவித்ததாவது:

'ஆனையிறவில் வைத்து 3 ஆயிரம் இராணுவத்தினரையும், கிளிநொச்சியில் வைத்து ஆயிரக்காணக்கான இராணுவத்தினரையும் படுகொலைசெய்தேன் எனக் கருணா அறிவிப்பு விடுத்துள்ளார். சுதந்திரக்கட்சியின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ பதவி வகித்த காலத்தில் கருணா உப தலைவராகவும், அவரது ஆட்சியில் பிரதி அமைச்சராகவும் பதவி வகித்தார். அதுமட்டுமல்ல இரண்டு தடவைகள் அவருக்கு தேசியப்பட்டியல் வாய்ப்பும் வழங்கப்பட்டது. இம்முறையும் தேசியப்பட்டியலில் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது என கருணா அம்மான் குறிப்பிட்டுள்ளார். வடக்கை ஆக்கிரமித்திருந்த புலிகளை கொன்றொழித்துவிட்டோம் என வீரவசனம் பேசியே தெற்கில் சிங்கள மக்களிடம் வாக்கு வேட்டை நடத்தும் வகையில் தேசப் பற்றாளர்கள் என்ற போர்வையில் ராஜபக்ஷ அணியினர் அரசியல் உரைகளை நிகழ்த்திக்கொண்டி ருக்கின்றனர். அதேபோல் இராணுவத்தினரை கொன்றுவிட்டதாக வீராப்புபேசி வடக்கு, கிழக்கில் வாக்குபெறும் முயற்சியில் ஆளுங்கட்சியின் சகாக்கள் ஈடுபட்டுள்ளனர். அதாவது ஒரே முகாமிலுள்ள இரு அணிகள், புலிகளையும், இராணுவத்தையும் வைத்து உணர்ச்சி அரசியல் செய்கின்றனர். எனவே, ராஜபக்ஷ முகாமில் உள்ளவர்கள் போலி தேசப்பற்றாளர்கள் என்பது உறுதியாகியுள்ளது. ஆயிரக்கணக்கான இராணுவத்தினரை கொன்றேன் என புலிகளின் தளபதி ஒருவர் முதன்முறையாக ஏற்றுக்கொண்டுள்ளார். புலிகள் அமைப்புடன் தொடர்பை பேணியதற்காக 20, 30 ஆண்டுகளாக பலர் சிறையில் இருக்கின்றனர். ஆனால், இராணுவத்தினரை கொன்றவர்கள் வெளியில் சுதந்திரமாக இருந்து, பதவிகளை அனுபவித்து வந்துள்ளனர். எனவே, கருணாவின் அறிவிப்பு தொடர்பில் ஜனாதிபதியும், அரசாங்கமும் தமது நிலைப்பாடுகளை நாட்டு மக்களுக்கு அறிவிக்கவேண்டும்' - என்றார். (ம-44)



# சாவகச்சேரி நகர எல்லைக்குள் திண்மக் கழிவகற்றல் மையம்

## அமைக்கிறது வேள்ட் விஷன்

**சாவகச்சேரி, ஜூன் 21**

**சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் திண்மக்கழிவுகளை வினைத்திறனான முறையில் வெளியேற்றுவதற்காக சமூகப் பங்களிப்புடன் கூடிய வள நிலையத்தை வேள்ட் விஷன் நிறுவனத்தினர் அமைக்கவுள்ளனர்.**

இந்த நிலையத்தில் அழிவடைந்த பிளாஸ்டிக் கழிவுப் பொருள்களை சேகரித்தல், அவற்றை மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய வகையில் வகை பிரித்தல் போன்றன இடம்பெறவுள்ளன.

இந்தத் திட்டத்துக்கு தேவையான தொழில்நுட்ப வளங்களுக்காக 10 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 மாதங்களில் குறைந்தது 500 வீடுகளில் பாவனையற்ற, உக்காத நிலையில் காணப்படும் பிளாஸ்ரிக் பொருள்கள் சேகரிக்கப்படல் வேண்டும் என்று நிறுவனதிட்ட முகாமையாளர் ஹேமந்த் ஜயமான அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நகரசபைத் தவிசாளரிடம் கேட்டபோது நகரசபை எல்லைக்குட்பட்ட வீடுகளில் காணப்படும் பாவனைக்கு உதவாத பிளாஸ்ரிக் பொருள்கள் சபை வாகனங்கள் மூலம் சேகரிக்கப்படவுள்ளன. மக்கள் அவற்றை உரப்பைகளில் கட்டி வைத்து சபை வாகனம் வரும் வேளையில் வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார். (த-9)

# மருத்துவ முகாமும் குருதிக்கொடை நிகழ்வும்

நெடுந்தீவு, ஜூன் 21

நெடுந்தீவு நண்பர்கள் வட்டத்தின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு மருத்துவ முகாமும், குருதிக்கொடை நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு பிரதேச மருத்துவமனையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன. தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு நெடுந்தீவு நண்பர்கள் வட்டத்தின் தலைமைச் செயலகம் திறந்து வைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-ந)

# சிறுபோகத்தில் அதிக விளைச்சல்; இயற்கையை வேண்டி பொங்கல்

நோய்த் தாக்கங்கள், இயற்கைப் பாதிப்புகள் ஏதுமின்றி சிறுபோகச் செய்கையில் அதிக விளைச்சல் பெறப்பட்டவேண்டும் என்று இயற்கைத் தெய்வத்தை வேண்டி விவசாயிகளால் பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளே இவ்வாறு பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர். சிறுபோக வயல் அறுவடை இன்னும் ஓரிரு வாரங்களில் இடம்பெறவுள்ள நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த வழிபாடு நடைபெற்றது.

தமது வயல் விளை நிலங்களுக்கு நோய்தாக்கம் மற்றும் இயற்கையினால் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படாமல் கூடிய விளைச்சலைப் பெறவேண்டும் என அவர்கள் இயற்கைத் தெய்வத்திடம் வேண்டிக்கொண்டனர்.

மட்டக்களப்பு கரவெட்டி கிராம அலுவர் பிரிவுக் குட்பட்ட கரவெட்டி மற்றும் விளாமுனை கிராம விவசாயிகளால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. விளாமுனை பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல் இடம்பெற்றது. (ப-46)



# சிலைகள் அமைக்கலாமா?

## ஆராய 6 பேர் கொண்டகுழு

### காரைநகர் பிரதேச சபை நியமிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவில் ஈழத்து சிதம்பரம் அமைந்துள்ள சூழலில் வேறு சுவாமிகளின் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளமையை ஆராய காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் தலைமையில் 6 பேர் கொண்டகுழு அமைக்கப்பட்டுள்ளது.

ஈழத்து சிதம்பரம் அமைந்துள்ள சூழலில் யோகர் சுவாமிகளின் சிலைகள் எதனையும் அனுமதிக்க வேண்டாம் என்று சில வியாக்கியானங்களை முன்வைத்து காரைநகர் பிரதேச மக்கள் சிலர் சபைத் தவிசாளரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

அதேபோல காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயம் முன் அமைந்துள்ள யோகர் வளாகம் இந்து சமயம் தொடர்பான போதனைகள், அறநெறிக் கற்கைகள், பஜனைகள் மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகள் போன்ற அறநெறி சம்பந்தமான விடயங்களை முன்னெடுப்பதற்கு யோகர் சுவாமி வளாகம் தேவை என்பது தொடர்பான நியாயப்படுத்தல்களை காரைநகர் மக்கள் ஒன்றிணைந்த வகையில் தவிசாளரின் அவசர கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர். அதனையடுத்தே குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குழுவின் தலைவராக வி. கேதீஸ்வரதாஸ், உறுப்பினர்களாக உப தவிசாளர் க.பாலச்சந்திரன், திருமதி. த.பரமானந்தம், சு.கிருஷ்ணவரன், வீ.கண்ணன், ந.ஜெயகிருஷ்ணன் ஆகியோரை சபை தெரிவு செய்துள்ளது. (த-50)



கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவால் கொரோனா ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு தேவையான தொற்று நீக்கி மருந்து பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன. (ஐ-222)

### படையினரைக்...

கான தகுதி இதுதானா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசில் பிரதி அமைச்சராகப் பதவி வகித்தவரும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பங்காளிக் கட்சியான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான், நாவிதன்வெளி பிரதேசத்தில் மக்கள் கூட்டமொன்றில் உரையாற்றும்போது, 'நாம் ஆனையிறவில் ஒரே இரவில் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் வரையிலான இராணுவத்தினரைக் கொலை செய்தோம்' என்று வெளியிட்ட கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதைக் கண்டித்து தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ள சஜித் பிரேமதாஸ, ஆனையிறவில் ஒரே இரவில் 3 ஆயிரம் இராணுவத்தினரைக் கொலை செய்ததாக கருணா அம்மான் உரையாற்றியுள்ளார். அதே உரையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனக்குத் தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்க முன்வந்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். 'தாமரை மொட்டு' சின்னத்தில் தேசியப் பட்டியல் கிடைப்பதற்கு இதுவா அவசியமான தகுதியா?' என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ஒ.5,22)

### கடலட்டை...

வடமராட்சி கிழக்கில் வெளிமாவட்ட மீனவர்கள் கடலட்டை பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு உள்ளூர் மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டமும் நடத்தியிருந்தனர். இந்த நிலையில் கடலட்டை பிடிப்பில் ஈடுபடுவதற்கு புனித உத்தரிய மாதா ஆலயம் அனுமதி வழங்கியதாக உதயனில் செய்தி வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் குடாரப்பு கார்மேல்மாதா கடற்றொழில் அமைப்பின் பிரதிநிதிகள் சிலர் உதயன் பணிமனைக்கு வருகை தந்து விளக்கம் தெரிவித்தனர்.

தமது சங்கமே கடலட்டை பிடிப்புக்கான அனுமதியை எம்.எம். என்ரபிரைஸ் நிறுவனத்துக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி வரையில் வழங்கியுள்ளதாகவும். அவர்களின் 30 படகுகள் கடலட்டை பிடிப்பில் ஈடுபட அந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர். அவர்களால் வழங்கப்படும் நன்கொடை ஆலய கட்டட மறுசீரமைப்புக்காக பயன்படுத்தப்படும் என்றும் இதற்கான ஒப்புதலை ஊர் மக்களே வழங்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ஒ.5)

### நான்...:

யாழ்ப்பாணம் பொம்மைவெளியில் வைத்து 520 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாநகரில் இளைஞர்களுக்கு ஹெரோயின் போதைப்பொருளை விநியோகித்து வந்த சந்தேகத்தில் பொம்மைவெளி டானியல் நீண்ட நாள்களாக தேடப்பட்டு வந்தார். பொலிஸாருக்கு டிமிக்கிவிட்டு வந்த சந்தேக நபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் விற்பனையைத் தடுக்க சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கவேண்டும், என்று பொலிஸார் சமர்ப்பணம் செய்தனர்.

எனது பெயரும் டானியல்தான். ஆனால் பொலிஸாரால் தேடப்படும் போதைப்பொருள் வியாபாரி பொம்மைவெளி டானியல் நான் இல்லை, என்று சந்தேக நபர் தெரிவித்தார். வழக்கை ஆராய்ந்த நீதிவான் சந்தேக நபரை வரும் ஜூலை 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஒ.5)

### இளைஞர்கள்...

நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த சங்கத்தார் வயல் இயக்கச்சியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் உயிரிழந்தனர். டிப்பர் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்ணதாசன் கஜீபன் (வயது-19), தம்பிராசா புவித...ன் (வயது-21) ஆகிய இளைஞர்களே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் கொடிகா...ம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு ...ன்னால் ஒரு டிப்பர் சென்று கொண்டிருந்தது. அத...ா முந்திச் செல்ல முயன்றனர். இதன்போது எதிர்த்...ச யில் வந்து கொண்டிருந்த மற்றொரு டிப்பரு...ா நேருக்கு நேர் மோதினர். மோட்டார் சைக்கிள் சித...ா டது. இளைஞர்கள் இருவரும் தூக்கி வீசப்பட்டனர். ...ந வர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மற்றையவர் சா...ச் சேரி மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டு அ...ர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிர்...ந் தார். (ஒ.5,6,9,26,1...

## சூரிய...

நீரில் நனைத்து அதன் ஊடாக சூரியனைப் பார்க்கலாம். கண்ணாடி அல்லது நீர் நிலைகளினூடாகவும் பார்க்க முடியும்.

கர்பிணிகள் சூரியகிரகண நேரத்தில் வெளியில் திரிவதோ அல்லது கிரகணகாலத்தில்சூரியனைப்பார்ப்பதனையோ தவிர்த்துக் கொள்ளுங்கள். கிரகண காலத்தில் சூரியனிலிருந்து வெளியேறுகின்ற புறவூதாக் கதிர்களின் தாக்கம் அவர்களை இலகுவில் தாக்கும் தன்மை கொண்டவை.

இந்தக் காலப் பகுதிகளில் உணவுகள் சமைப்பதனையோ உணவுகளை உட்கொள்வதனையோ தவிர்த்துக் கொள்ளுங்கள்.

சமைத்த உணவுகள் இருந்தால் அவற்றை தர்ப்பை புல் கொண்டு மூடிவைத்து கொள்ளுங்கள். கிரகண காலம் முடிந்ததும் அவற்றை எடுத்து விட்டு உணவுகளை உட்கொள்ளலாம்.

இந்தக் காலத்திலே ஆலயங்கள் கிரகண காலத்தின் முன்னர் பூசைகள் முடிக்கப்பட்டு அவை மூடப்படும். கிரகண காலம் முடிந்ததும் அவை பிராயச்சித்தம் செய்யப்பட்டு பூசைகளுக்காக திறக்கப்படும். இக்காலத்தில் நீர்நிலைகளில் வழிபாடுகள் செய்தல் நன்மை பயக்கும். தர்ப்பணங்கள் மற்றும் பாராயணங்கள் இக்காலத்தே செய்வதால் பலமடங்கு பலனைத்தரும். என்றார். (ஒ,5,110)

**தாதிய உதவியாளர் பயிற்சிநெறி குறைந்த கட்டணங்களுடன்**
**தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையில்**

தாதிய உதவியாளர் தொழிற்கல்வி யாழ் மாவட்டத்தில் முதன்முறையாக வைத்தியசாலையில்

O/L உடன் ஆரம்பம் **01.07.2020**

விண்ணப்பப்படிவங்களை வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

- அனுபவம் மிகுந்த தாதிய விரிவுரையாளர்களால் விரிவுரைகள் வழங்கப்படும்.
- வைத்தியர்கள் மற்றும் தாதியர்களால் செயன்முறை விளக்ககங்கள் வழங்கப்படும்.
- **NVQ** தரச் சான்றிதழ் பாடவிதானங்களுக்கு அமைவாக விரிவுரைகள் மேற்கொள்ளப்படும்.
- **NVQ** பாடவிதானங்களுக்கு மேலாக
  - ➤வைத்திய நிர்வாக செயன்முறை
  - ➤நோயாளர் நலன் பேணல்
  - ➤தொடர்பாடல திறன் சார்ந்த பயிற்சிகள்
  - ➤செயன்முறையுடன் வழங்கப்படும்.
- தாதிய அடிப்படை விழுமியங்களை முன்நிறுத்தும் வகையில் பயிற்சிகள் நடைபெறவுள்ளது.
- வார இறுதி நாள்களில் வகுப்புகள் நடைபெறும்.
- ஒரு வருட பாடநெறி



பயிற்சியின் பின்னர் மூன்றுமாதம் வைத்தியசாலையிலேயே உள்ளகப்பயிற்சி
திறமை அடிப்படையில் வைத்தியசாலையிலேயே நிரந்தர வேலைவாய்ப்பு

**தொழிற்கல்வியை பெற்றிட இன்றே விரையுங்கள்**
மேலதிக தகவல்களுக்கு +(94) 77 238 0195
தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ.து).

# மரண அறிவித்தல்

## செல்வி தனபாலசிங்கம் சந்திரவதனி

**தோற்றம்:28.07.1957 மறைவு:19.06.2020**



அரசடி வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தனபாலசிங்கம் சந்திரவதனி 19.06.2020 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் யோகாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் வினோதினி, இரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோரஞ்சிதத்தின் பெறாமகளும் காலஞ்சென்ற இராசநாதனின் மருமகளும் ஜெயக்குமார், சிவகாமி, மைலைநாதன் ஆகியோரின் மைத்துனரும் விதுஜா, லக்சுஜன் ஆகியோரின பெரியம்மாவும் கஜானி மற்றும் தேனுஜா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி,**
**வடலியடைப்பு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## நாகநாதர் குலசிங்கம்

குப்பிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் குலசிங்கம் நேற்று (20.06.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர் நல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோகமலரின் அன்புக் கணவரும், கெங்காதேவி (பிரான்ஸ்), விமலாதேவி, பாலசுப்பிரமணியம் (கனடா), சத்தியதேவி (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான இராசநாயகம், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குலநிதி (கனடா), குலமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், கெங்காதரன் (கனடா), சுகந்தன் (மாநகர சபையின் மின்சாரப்பகுதி) ஆகியோரின் அன்பு மாமனாரும், துதிபன், சுஜிபன், யதீபன், யகஜனனி, ஷஜான், ஷஜின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குப்பிளான் தெற்கு,**
**குப்பிளான்.**

**தகவல் : -**
**குடும்பத்தினர்.**
**077 101 6407**

**வாடகைக்கு**
67 அடி அகலம், 32 அடி நீளம் கொண்ட கடை. இது பெரும் ஹாட்வெயார்,மின்சார உபகரணங்கள், வங்கிகள், பினான்ஸ் கம்பனிகள், பெரிய Show Room என்பவற்றுக்கு பொருத்தமான பெரிய கட்டடம்
தொடர்பு:077 696 4269
Viber:070 2274 105, 077 3600 703
C/O: சிறிமுருகன் H/W
உப்புமடச் ச்ந்தி, கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.

# மரண அறிவித்தல்



## செல்லப்பா பொன்னையா

பலாலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பொன்னையா நேற்று (20.06.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், பொன்னுப்பிள்ளையின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற நல்லபிள்ளை மற்றும் அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் செல்லத்துரை, தங்கராசா, இராசதுரை, செல்லம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2020) பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**077 895 1549**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கொடியேற்றத்தில்...

விழாவில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டதால், ஆலயச் சூழலில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டது.

ஆலயத் திருவிழாவுக்கு, ஆலய அறங்காவலர் சபையினர், உபயகாரர்கள், நாதஸ்வரக் குழுவினர் உள்ளிட்டவர்கள் தவிர்ந்த ஊரவர்கள் 50 பேர் மாத்திரமே ஒரு நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ஆலயக் கொடியேற்றத்துக்கான பூசைகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின. 50 பேர் மாத்திரம் முதலில் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். ஒரு மணி நேரத்தின் பின்னர் அவர்கள் வெளியேற்றப்பட்டு மற்றொரு 50 பேர் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். அவர்களும் சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் வெளியேற்றப்பட்டனர்.

இதன்போது ஆலயத்துக்கு வெளியில் சுமார் 300 தொடக்கம் 400 பேர் வரையில் திரண்டிருந்தனர். சகலரையும் ஆலய வழிபாட்டுக்கு அனுமதிக்குமாறு கோரி பொலிஸாருடன் முரண்பட்டனர். 50 பேரை மாத்திரம் அனுமதிப்பதாக இருந்தால் தாங்கள் யாரும் வழிபாட்டுக்கு உள்ளே வரமாட்டோம் என்று பொலிஸாருடன் வாக்குவாதப்பட்டனர். இதனால் ஆலயக் கொடியேறும் நேரம், பக்தர்கள் எவரும் ஆலயத்தினுள் உள்ளே இல்லாத நிலைமை காணப்பட்டது. (ஒ,5)

## ஆனையிறவுச்...

நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

1977ஆம் ஆண்டு முதல் ஆனையிறவை ஐக்கிய தேசியக் கட்சி அரசு பாதுகாத்தது. 2000 ஆம் ஆண்டு சந்திரிகா ஆட்சியின்போதே அது வீழ்ந்தது. ஆனையிறவு வீழ்ந்தபோது ஒரே நாளில் 2 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டனர் என்று கருணா அம்மான் அறிவித்துள்ளார். 2000 ஆம் ஆண்டு நாமும் அரசியலில் இருந்தோம். ஆனால், இப்படியானதொரு பாரதூரமான தகவலை தற்போதுதான் கேள்விப்படுகின்றேன். அப்படியானால் இந்த நாட்டில் தகவல்கள் மறைக்கப்பட்டனவா? 2 ஆயிரம் பேரை எப்படி 24 மணிநேரத்துக்குள் கொல்வது? அங்கு பெரிய மனித உரிமைமீறல் இடம்பெற்றிருக்கவேண்டும்.

இராணுவத்தில் இருந்த ஒருவரே ஜனாதிபதியாகப் பதவி வகிக்கின்றார். அவருக்கு இராணுவத்தின் மீது பற்று உள்ளது. எனவே, கருணா அம்மான் வெளியிட்ட தகவல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்படவேண்டும். இதற்காக ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை அமைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுக் கொள்கின்றது, என்றார்.

(ஒ,5,44)

## வீட்டு தாதியர் சேவை



Prominent
Home Nursing and Health Care

"நாம் உங்களது அன்புக்குரியவர்கள் மற்றும் நோயாளிகளுக்கு மதிப்புக்குரிய சேவைகளை வழங்குகின்றோம்."

வீட்டு தாதி சேவை மற்றும் சுகாதார பராமரிப்பு பற்றி பெரும் பாலான மக்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு நோய் ஏற்பட்டு அக்கறையுடன் செயற் படக்கூடிய வைத்தியப் பராமரிப்பு தேவைப்படும் போது கைகொடுப்பதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

**எம்மால் வழங்கப்படும் சேவைகள்:**

01. வீட்டு தாதியச் சேவை
02. சிரேஸ்ட தாதியர் வசதி
03. அழைப்பிலுள்ள வைத்தியம்
04. உடற்பயிற்சிக்கானஆலோசனைகள் மற்றும் சேவைகள்.

பதிவுக்கட்டணம் இல்லை

உரிய கட்டணத்திற்கு தரமான சேவையை நாம் வழங்கிவருகின்றோம்.

தொடர்புகளுக்கு: தொ.பே.இல: 077 3700 182 | 076 432 0249
முகவரி:25/1, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### காசிப்பிள்ளை திலகவதி

இணுவில் மேற்கு வட்டுவினியைப் பிறப் பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி காசிப்பிள்ளை திலகவதி கடந்த 19.06.2020 வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முதலித்தம்பி தம்பதியரின் அன்பு மரு மகளும் காசிப்பிள்ளையின் அன்பு மனை வியும் கமலேஸ்வரி மற்றும் காலஞ் சென்ற வர்களான இராஜேஸ்வரி, பாலசுப்பிர மணியம் ஆகியோரின் அன்பு தாயாரும் கதிரகாமத்தம்பி, கமலநாதன் ஆகியோரின் மாமியாரும் ரமேஷ், ஆதினி, கணேஸ், வாசுகி, சுந்தர வடிவேல், ஜானகி, தமிழ்வாணன், வித்தகி, தேசிகன், சுசி ஆகி யோரின் பேர்த்தியும் வர்சினி, வர்ணன், கரன், ஹரிஸ், கீரன், விதுஷா, மனோஜன், மானசி, மேகவி, கிருத்திகன்,காருண்யா, கிருதிலயா, மனோலயன் ஆகியோரின் பூட்டியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று காரைக்கால் இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் மேற்கு,**
**வட்டுவினி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி மேரி ஸ்ரேலா மரியதாஸ் (லில்லி)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் நத்மலானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி ஸ்ரேலா மரியதாஸ் (லில்லி) நேற்று (20.06.2020) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் ஜோசப் மரியதாஸின் அன்பு மனைவியும், அந்தோனிமுத்து சிசிலியா தம்பதியரின் அன்பு புதல்வி யும், றெபேட் லேற்ரீசியா, புவனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்ரன் ராஜின் அன்புத் தாயாரும், லக்ஷியின் அன்பு மாமியாரும், றொபேட், மாஜோ, மரி யோவின் அன்ரன்ராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.06.2020) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு, மாலை 3.30 மணிக்கு இறுதி ஆராதனையுடன் கல்கிசை பொது மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**மகன்-அன்ரன் ராஜ்**

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

**STUDENT VISA** Study, Work & Settle
- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் - Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்



**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து தரப்படும்

**Hotline: 0777-761 346**



flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute

Mr. Jegan - Director, Flex Institute

10 வருட கால நம்பிக்கையான சேவை

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 07 |  | 20 |
| * | | * |
| 09 | | 06 |
| * | | * |
| 1947 | | 2020 |

திருமதி.
### விமலசோதி தவராசா (பேபி அக்கா)

வேலணையை பிறப்பிடமாகவும் யாழ் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விமலசோதி தவராசா (முன்னாள் காசாளர், சென்றல் நர்ஸிங் ஹோம்) அவர்கள் சனிக்கிழமை (20.06.2020) அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு சிவபாக்கியம் (ஸ்தாபகர், முன்னாள் அதிபர் வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்) தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசையா செல்லம்மா தம்பதியனரின் மருமகளும், காலஞ்சென்ற இராசையா தவராசாவின் பாசமிகு மனைவியும், அசலை, அமலன், நிமலி, சாமளை, ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானஸ்கந்தன், கலாசோதி மற்றும் காலஞ்சென்ற ஞானசோதியின் பாசமிகு சகோதரியும் சிவகுமார், கார்த்திகா, ஐங்கரராஜ், டிலக்ஷன், ஆகியோரின் அன்பு மாமியாரும், சாய்ருஜன், அன்ருதன், ஸ்ரவன், இஷிதா, ஹெமிஸா, ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை (22.06.2020) முற்பகல் 9.00 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 1.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்சல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

**தகவல் : குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**
**0773337404 – ஐங்கரராஜ்**
**26A, தக்சினராம வீதி,**
**கல்கிசை**

## காணி குத்தகைக்கு

பளை (A9 வீதி), குடத்தனை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் காணி குத்தகைக்கு உண்டு.
**தொடர்பு:- 077 843 5397**

## வீடு வாடகைக்கு உண்டு

கொட்டடி மீனாட்சி அம்மன் வீதி, றெலிக்கொம் அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.
**TP:- 077 953 5479**

## அடகு நகைமீட்பு

நீங்கள் அடகு வைத்து நகைகளை மீட்க முடியாமல் விட்டால் மீட்டு அதற்கான பெறுமதி பணம் தரப்படும்.
தொடர்பு: 077 615 1283

## ஆடுகள் விற்பனைக்கு

ஜமுனா பெரி ஆடுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: **077 6710 448**

## தேவை

பில்கிளார்க், பொதியிடல், உதவியாளர், சமையல், மாவறுத்தல் என்பவற்றுக்கு பெண் ஊழியர்கள் தேவை.
தொடர்பு: **077 174 6101**

## அறைகள் வாடகைக்கு

யாழ். பல்கலை கழகத்திற்கு அருகாமையில் படிக்கும், வேலைபார்க்கும் பெண்களுக்கு அறைகள் வாடகைக்குண்டு.
**777 698 553, 77 369 8553**

## விற்பனைக்கு

அத்திவாரம் வெட்டிய மண் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:**:0777 730 567**

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை யில் 4 அறைகளுடன் கூடிய பெரிய வீடு வளவு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:**: 077 113 0304**

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம், மடத்தடியில் உள்ள 6 பரப்புக் காணி, K.K.S. வீதியில் இருந்து 100m தூரத்தில் உள்ளது.
தொடர்பு:**:077 978 9752**

## ICT வகுப்புக்கள்

G.C.E (O/L), (A/L)-2020 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச வகுப்புக்கள் செயன்முறை பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம் **04,05/07/2020**
நேரம் **10.00AM**

- இலவச கையேடுகள் வழங்கப்படும்.
- கடந்த கால பரீட்சை மீட்டல் வகுப்புக்கள்
- பிரத்தியேக/குழு வகுப்புக்கள்
- சமூக இடைவெளியினடிப்படையில் மாணவர்களுக்கான அனுமதிகள்.
- பிரபல விரிவுரையாளர்களின் சேவை

**IPS** பல்கலைக்கழகம் முன்பாக
திருநெல்வேலி.
T.P: 076 685 2529
021 434 0229



# மரண அறிவித்தல்

பிறப்பு 19. 03. 1932



இறப்பு 20. 06. 2020

## சரவணை கனகம்மா

மனிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை கன கம்மா 20.06.2020 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற வர்களான குஞ்சர் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மருதர் சரவணை அவர்களின் பாசமிகு மனைவியும், நாகேஸ்வரி, மகேஸ்வரி, நாகேந்திரம், புவனேஸ்வரி, விக்னேஸ்வரி, புஸ்பலதா, லலிதா, ஞானேந்திரம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பழனி, தங்கராஜா மற்றும் ரஞ்சிதமலர், செல்வரட்ணம், கெனன் அன்றுட்ஸ், தேவராஜா, பாலகு மார், ரஜனி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், நல்லம்மா மற்றும் கந்தசாமி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.06.2020 ஞாயிற்றுக்கிழமை அவ ரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.2 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கனகசபை வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

VILUTHU
Centre for Human Resource Development

# பதவி வெற்றிடம்

விழுது நிறுவனத்தில் பணியாற்றுவதற்குத் தகுதியான விண்ணப்பதாரி களிடமிருந்து திட்ட அலுவலர்கள் மற்றும் கள ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பதவிகள் வெற்றிடமாக உள்ளதனால் பின்வரும் தகைமைகள் உடையோர் தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

இவ் அலுவலர்கள் மக்களுடனான களப்பணியில் ஈடுபடும் அதேவேளை ஆவணப்படுத்தலிலும் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். குறிப்பாக நிறுவனத்தின் தேவைப்படும் அனைத்துத் தரவுகளையும் உடனுக்குடன் பேணுவதாகவும் சிரேஸ்ட திட்ட அலுவலர் மற்றும் தலைமை அலுவலகத்தினால் கோரப்படும் அணியினருடன் பணியாற்றுபவராகவும் இவ் அலுவலரின் பணி அமையும்.

அடிப்படைத் தகுதிகளும் எதிர்பார்க்கப்படும் பொறுப்புக்களும்

- சமூக விஞ்ஞானம் துறைசார் பாடங்களில் அல்லது அதனுடன் தொடர்புடைய கற்கை நெறிகளில் டிப்ளோமா அல்லது இளங்கலைமாணி பட்டப்படிப்பு.
- குறைந்தது மூன்று தொடக்கம் ஐந்து ஆண்டு காலம் வரையிலான சமூகப் பணி அனுபவம்
- நலிவுற்றோரை சமூக வலுவூட்டல், பால்நிலைப் பகுப்பாய்வு, சந்தை முகாமைத்துவம், ஆய்வு முறையியல் மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளில் சிறந்த அறிவும் அனுபவமும்.
- ஆவணப்படுத்துகை ஆற்றல். குறிப்பாகக் கற்கைச் சம்பவங்களை உடனுக்குடன் நிதி வழங்குனர்களுக்கு வழங்குவதில் உதவுதல்
- தகவல் சேகரிப்பு தரப்பகுப்பாய்வுக் கணிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- பயிற்சிகளை நடாத்தும் ஆற்றல்
  மேலதிகத் தகைமைகளாகப் பின்வருவன எதிர்பார்க்கப்படுகின்றன.
- ஆங்கில அறிவு
- அடிப்படைக் கணினி அறிவு (MS Word, Excel, Power Point, Internet & Email)
- சாரதி அனுமதிப்பத்திரம்
- யாழ் மாவட்டத்தில் பணிபுரிய விரும்புவோருக்குக் கோப்பாய் மருதங்கேணி மற்றும் தென்மராட்சி பிரதேசங்கள் பற்றிய பரிச்சயமும், முல்லைத்தீவ மாவட்டத்தில் பணிபுரிய விரும்புவோருக்குப் புதுக்குடியிருப்பு, கரைதுரைப்பற்று மற்றும் துணுக்காய் போன்ற பிரதேசங்கள் தொடர்பான பரிச்சயமும் இருத்தல் சிறந்தது.

விண்ணப்பதாரிகளது தகுதி, திறன் மற்றும் அனுபவத்திற்கேற்ப வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்களை உங்கள் சுய விபரக் கோவையை விழுது, இல. 191, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு – 04 எனும் முகவரிக்கு எதிர்வரும் 30-06-2020 ஆந் திகதிக்கு முன்னர் info@viluthu.org இற்கு மின்னஞ்சலில் அனுப்பி வைக்கவும். பெண்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

# மரண அறிவித்தல்



பிறப்பு: 09.05.1937 இறப்பு: 08.06.2020

## திருமதி குலரத்தினம் கனகம்மா

(பாலாவோடை, களபூமி காரைநகர்- பிரித்தானியா)

யாழ். காரைநகர் களபூமி பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும், களபூமி பாலாவோடையை வசிப்பிடமாகவும் தற்போது பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குலரத்தினம் கன கம்மா கடந்த (08.06.2020) திங்கட்கிழமை அன்று பிரித்தானியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான A.R வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான K.K. விஸ்வலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற க.வி.குலரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், பிரித் தானியாவைச் சேர்ந்தவர்களான சதானந்தலிங்கம், சர்வானந்தலிங்கம், பரராசலிங்கம், தேவநா யகி, குலதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம் A.R.V சோம சுந்தரம், சரஸ்வதி (பாலா) மற்றும் பரமசிவபிள்ளை, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்கினேஸ்வரன், தவராசா, சத்தியபாமா, தவயோகேஸ்வரி, கவிதா ஆகியோரின் அன்பு மாமியா ரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் K.K.V. பரமானந்தம்,பஞ்சலிங்கம் காலஞ்சென்ற வர்களான ஆறுமுகம், ஆறுமுகதிலகர், புவனேஸ்வரி மற்றும் கமலாம்பிகை, இராஜேஸ்வரி, திலகவதி, இந்திராணி, காலஞ்சென்ற சிவபாலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, சண்முகம், யோகராணி மற்றும் சிவரூபராணி, பொன் னம்பலம், சிவபாலன், செல்வராசா ஆகியோரின் அன்புச் சகலியும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் கமலாம்பிகை, காலஞ்சென்ற குமராசாமி சிவபாக்கியம் மற்றும் கந்தசாமி, காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, சண்முகம் விஜயலட்சுமி, சிவபாலன் இந்திராணி ஆகியோரின் அன்புச் சம்மந் தியும், மாலதி, திவ்யா, சத்யா, கனகா, மேனகா, லிங்கா, குலம், சாய்ஸ்வரி, சாயிருபினி, சாயினி, சிவகுமார், சிவசக்தி, ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.06.2020) திங்கட்கிழமை முற்பகல் 7.00-10.30 மணியளவில் 6 Asthil Grove, Coventry CV3 6 HP, UK இல் நடைபெற்று பூதவுடல் 22.06.2020 முற்பகல் 11.00-11.30 மணியளவில் The Lodge Cannon Hill Rd, Coventry, CV4 7DE, UK இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

532 பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி தவமணி கதிரமலை

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி, கீரிமலை, கனடா, தற்போது 158, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவமணி கதிரமலை கடந்த (19.06.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கீரிமலை சபாபதி கதிரமலையின் (ஆசிரியர்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான மலேசியா தம்பிஜயா-தாங்கச்சியம்மா ஆகியோரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கீரிமலை சபாபதி-தெய்வானைப் பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், ஜெகதாம்பிகை (ஓய்வுபெற்ற உப அதிபர்), கலைவாணி (ஓய்வுபெற்ற உப அதிபர், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி, திருநெல்வேலி), சபானந்தன் (கனடா), சபாநடேசன் (சிறீ-கனடா), சபாநேசன் (சுரேஸ்-கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாதரன் (J.P, மொழிபெயர்ப்பாளர், ஓய்வுபெற்ற பொ.மு.உ), முத்துக்கிருஷ்ணன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்), கனடாவில் வசிக்கும் வனிதா, மணிமாலா அனுஷியா ஆகியோரின் அருமை மாமியாரும், கஜனி (ஆசிரியை-யா/புங்குடுதீவு ம.வி) நிவேதா (இயன் மருத்துவர், கண்டி போதனா வைத்தியசாலை), மாதுரி (மாணவி-வயம்ப பல்கலைக் கழகம்), கனடாவிலுள்ள திவ்யா, நவீனன் நிலவன், கோபினா, தீபனா, மாலவன், அபிசன், மானஷி, அக்சுதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, புஷ்பலீலாவதி, குலசிங்கம், புனர்பூசனி மற்றும் ஆலாலசுந்தரம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை 158, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 9.00 மணியளவில் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**158, சட்டநாதர் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**தொலைபேசி: 021 222 5186, 071 856 1625, 077 622 9848**

## 20ஆம் ஆண்டு நினைவு நாள்

**மலர்வு : 01.06.1933 உதிர்வு : 03.07.2000**





### அமரர் கந்தையா மயில்வாகனம்

**பொலிஸ் பப்பா**
**(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)**

**திதி : பிரதமை 21.06.2020**

மண்ணுலகில் பிறந்த மானிடர் யாவரும் விண்ணுலகு செல்வது
இயற்கையின் நியதி ஆனால்
என் மனம் தாங்குதில்லையே
மறைந்தோடியது இருபது ஆண்டுகள்
நேற்று நடந்தது போல் நினைத்துப் பார்க்கிறேன்
நிஜமாக இருந்த உங்களை 20 வருடமாக நிழல் படத்தில்
பார்த்துக் கலங்குகிறேன்
தீராத வேதனையில் தவிக்கிறேன் இவ்வுலகில்
இவ்வளவு வயது சென்றும் உங்கள் பாசமும் அன்பும்
மறக்க முடியவில்லை
விதியை நொந்து நொந்து உங்கள் காலடிக்கு
வரும்வரைக்கும் உங்கள் நினைவுடன் இருப்பேன்
தனிமரமாக இருக்கும் எனக்கு உங்கள் பாசத்தின்
நிழல்தான் என்னை வழி நடத்துகிறது.
என்றும் உங்கள் ஆத்மா சாந்திபெற
சந்நிதிமுருகனை வேண்டுகிறேன்.

**பழைய பாலத்தடி,**
**தொண்டைமானாறு.**

**திருமதி. ம.பரமேஸ்வரி**
**(மனைவி)**

## மரண அறிவித்தல்



### வில்வரெட்ணம் புஸ்பராணி (தேவி)

மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.29/5 சட்டநாதர் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட வில்வரெட்ணம் புஸ்பராணி அவர்கள் நேற்று (20.06.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரெட்ணம்(சேனாதிராசா) கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தில்லைவனம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வில்வரெட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி, பராசக்தி காலஞ்சென்ற செல்வரெட்ணம்(கொத்தலா), மனோகரன், காலஞ்சென்ற மகேந்திரன் (சிவம்) ஆகியோரின் சகோதரியும் செல்வராணி (கோமளா), வளர்மதி(மதி), மைதிலி, கயந்தினி, யசிந்தா ஆகியோரின் தாயாரும் கணேஸ், சசிக்குமார், இரவீந்திரகுமார் (ரவி), இளையராஜா (காவலன்) ஆகியோரின் மாமியும் அனித்தா, அஜித்தா, சரவணப்பிரியன், யனுசன், சுவேனிகா, திவ்வியன், விதுஷன், சபிதன், சாயிஷா ஆகியோரின் அம்மம்மாவும் இராசரெத்தினம், காலஞ்சென்றவர்களான பவனம் நவரத்தினம் மற்றும் சரஸ்வதி காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் ரஞ்சனாதேவி, கேதீஸ்வரி, மகாலட்சுமி (லதா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக மண்கும்பான் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**29/5 சட்டநாதர் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**22 • 01 • 1958**



**மறைவு**
**20 • 06 • 2020**

### திருமதி ஸ்ரீகாந்தா குலமணி

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீகாந்தா குலமணி நேற்று (20.06.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா இராசமணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமநாதபிள்ளை மற்றும் இராசமலர் தம்பதியினரின் அன்பு மருமகளும், ஸ்ரீகாந்தாவின் (ஓய்வுபெற்ற கணக் காய்வாளர் -CTB) அன்பு மனைவியும், சுஜீவன் (கனடா), பிருந்தா (அவுஸ்திரேலியா), பிரவீனா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் தவமணி, சண்முகரட்ணம், மோகனதாஸ் (ஜேர்மனி), சிவநேசன் (லண்டன்), குணறஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீதரன் (சுவிஸ்), ஸ்ரீரஞ்சன் (கனடா), ஸ்ரீபாஸ்கரன் (கனடா), ஸ்ரீரஞ்சனி (டென்மார்க்), ஸ்ரீராஜ் (கனடா), ஸ்ரீகாந்தன், ஜெயலட்சுமி, சகுந்தலா (ஜேர்மனி), குமுதா (லண்டன்), சிவகரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், தேவகி (கனடா), சுயன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அர்வினின் (அவுஸ்திரேலியா) பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2020) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பி.ப2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P : +041 6262 7257
+61419864677

**தகவல்:**
**மகன் - சுஜீவன் (கனடா)**
**மகள் - பிருந்தா (அவுஸ்திரேலியா)**

## எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 136 சர்வதேச நாடுகளில் 70 வருடங்களாகவும் இலங்கையில் 37 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் யாழ்ப்பாணம் மற்றும் அதனுடன் இணைந்த எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடங்கள்**

**1. கணினிப்பயிற்றுவிப்பாளர் (Computer Instructor) .**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்/ தொழிற்கல்வி நிறுவனம் ஒன்றில் **NVQ Level (V)** கற்கை நெறிச்சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருத்தல்.

சமூக சேவையில் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவராயும், குறைந்தது 02 வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டவராக இருப்பதோடு, ஆங்கில மொழியறிவு கொண்டிருப்பது விரும்பத்தக்கது.

**2.சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர் (Care Taker)** - பெண்

குடும்ப பொறுப்புகளற்ற பிள்ளைகளுடன் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய 26 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்

இந்நிறுவனத்தில் சேவையாற்ற விரும்புவோர் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 30.06.2020 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

**"SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore> it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection> recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross checking of references.'**

**தொடர்புகளுக்கு: எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம், இல:219, நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தொ .பே: 021-2211101, 077-3733711**

**மின்னஞ்சல்: jaffna@soscvsrilanka.org**

# JOB OPPORTUNITY WITH AUSTRALIAN COMPANY

**ACANCY : CUSTOMER CARE CUM OPERATION EXECUTIVE**

**LOCATION : SRI LANKA**

**TYPE OF JOB : FULL TIME FREELANCER- WORK FROM HOME**

**SALARY : 40,000 - 50,000/- SLR + YEARLY INCENTIVES**

**JOB DESCRIPTION:**

- Professionally answering emails / Facebook messages received from potential / existing customers to take orders, answer inquiries, resolve complaints and provide information.
- Record and maintain attended queries and related data in system
- Enter customer's information and maintain customers records accurately
- Follow up customers queries where necessary
- Research required information using available resources for quality work
- Ensuring all stake holders are working as per the process
- Analyzing the business and create leads
- Provide good service throughout life cycle of order and retain the customer by satisfying the customer with attentive, regular and prompt response
- Working on SEO and creating back links for maximum inquiries
- Other process and operational work as per requirements

**REQUIREMENTS:**

- 2 to 4 years of BPO experience needed
- Should know Tamil language
- Should have laptop/desktop and reliable internet connection
- Basic knowledge of Australia to attend queries efficiently
- Should have strong will for required learning for job
- Sales skills shall be required to convert potential query to customer
- Knowledge of SEO shall be preferred
- **Fluency in English is must**

**WORK TIMINGS, INCENTIVES AND WORK TRACKING:**

- Work timing shall be from 9 AM to 6 PM – Australian time
- Work days shall be from Monday to Friday full day working and 1hour extra on Saturday and Sunday (flexible)
- In addition to salary there shall be yearly lucrative incentives which shall be based converting the leads to sales and customer service
- Work shall be tracked and monitored trough company's time tracker software

**WHY TO WORK WITH US?**

- To grow fast with growing company
- Flexibility of working from home
- Additional benefit of learning SEO - as regular SEO trainings shall be arranged and accordingly work shall be allocated.
- Can earn additional up to 40% to 80% of yearly salary as yearly incentives

Interested candidates can send their resume and cover letter with vacancy mentioned in subject line to

**jobs@tapestodigital.com**

## வெள்ளவத்தையில் அறைகள்

HOTEL VILLA வில் அறைகள் AC / NON A/C
இணைந்த குளியலறை 1500-3900 வரை.
422/A, காலி வீதி, வெள்ளவத்தை.
ராமகிருஸ்ணா செட் அருகில். **077 255 2224**

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள எமது நிறுவனத்துக்கு Diesel Pump திருத்த வேலைகள் செய்ய அனுபவமுள்ள / ஆர்வமுள்ள 20-35 வயதிற்கு உட்பட்ட நபர் தேவை.

தொடர்பு: **077 2530 865**

## சேவை

வீட்டிற்கு வந்து இரத்தம் சலம் சோதித்து தரப்படும்

தொடர்பு:- **075 7848 867**
(யாழ் நகர எல்லைக்குள்)

## வேலைவாய்ப்பு

Stanly வீதியில் அமைந்திருக்கும் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றிக்கு கணக்காளர் Accountant மற்றும் வேலையாட்கள் தேவை.வயது 19- 55

தொடர்புகளுக்கு:
**076 717 3234,
021 221 2605**

N.S.T Motors (Pvt) Ltd
No.179 Stanly Road,
Jaffna

## மணமகன் தேவை

யாழ். இந்து 1982 பிறந்த மக நட்சத்திரம் லக்கினத்தில் செவ்வாயுள்ள B.Sc.M.SC பட்டதாரியும் அரச உயர் பதவி வகிக்கும் மணமகளுக்கு அரச பதவியிலுள்ள பட்டதாரி மணமகனைப் பெற்றோர். தேடுகின்றனர்.

**077 674 5275**

## வீடு தேவை

தெல்லிப்பளை வைத்தியசாலைச் சுற்றாடலில் (2km இடைத்தூரத்தில்) 2 பரப்பிற்கு குறையாத விஸ்தீரணத்தில் அமைந்த வாகனத் தரிப்பிடத்துடன் அமைந்த வீடு ஒன்று வாங்குவதற்கு தேவை.

தொடர்பு: **077 270 3142,
011 259 4250, 077 923 7797**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

யா/திருநெல்வேலி மாரியம்மன் வீதியில் 2 3/4 பரப்பு காணியுடன் நான்கு அறையுடன். சுற்றுமதிலுடன் தனி கிணற்றுடன் விற் பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 199 5709**

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கை, பப்பா, டொமினோசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்புட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி, வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343**

**கிளை:
K.K.S. வீதி,
இணுவில்**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் 4பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

**077 6778359/ 077 4167634**

## விற்பனைக்கு

தனங்கிளப்பு அறுகுவெளியில் சுற்று வேலி கொண்ட 80 பரப்பு (தென்னைச்செய்கைக்கு மிக உயர்ந்தது) காணிவிற்பனைக்குண்டு

**077 768 2734**

## விற்பனைக்கு

கொழும்பு 10 வைத்தியாசாலை சதுக்கத்தில் 1450 சதுர அடியில் 3 படுக்கையறைகள், 2 குளியலறைகள் வேலையாள் அறை மற்றும் குளியலறையுடன் வீடு விற்பனைக்குண்டு. விலை 27 மில்லியன் Not Negotiable

**077 766 9099**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் நகர மத்தியில் வீடு/ வியாபார தலம் நீண்டகால குத்தகைக்கு விடப்படும்.
**40 அடி பாதை 40 வாகனங்கள் நிறுத்தலாம். மருத்துவமனை, இரயில் நிலையம், வங்கிகள் அருகில்**

தொடர்பு:- 071 4444 204

## வாடகைக்கு வீடு தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்பு: 077 930 7774**

## வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள மிக்சர் கொம்பனி ஒன்றிற்கு வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு:- **077 631 6273**

## காணி விற்பனைக்குண்டு

பலாலி றோட், கொட்டைக்காடு வீதி, . கோண்டாவிலில் வீடு, கிணறு சுற்று மதிலுடன் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- **077 587 1954**

## நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்ல இன "கிரேட்டன்" 52 நாள்கள் ஆன ஊசி போட்ட நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:: **076 4679 663**

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் புடவை ஸ்தாபனம் ஒன்றுக்கு பணியாளர்கள் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புக்கு: **071 688 7505**

# Immediate Vacancy Project coordinator

Itham CACPD

The Community Association for Child Protection and Development CACPD-ITHAM is a non-profit, organization engaged in humanitarian work. Social transformation through holistic development.

**Job Location:** Karainagar, Kayts and Velanai DS Division

**Contract:** **Six Months**

**Knowledge and Skills:**

Relevant academic background
At least 2 years' experience working in the field along with Disability/Community Development.
Excellent Report writing skill in English
Computer skills in Word, Excel and PowerPoint
Driving license - Type AD license (motor bike) is essential

**CACPD is an equal opportunity employer**

Remuneration is negotiable & will depend on qualification and experience. Interested candidates should forward their complete resume and a motivation letter with contact details along with two referees to reach us on or before 26.06.2020. Only shortlisted candidates will be notified.

**Email: managementitham 2012@outlook.com**

**Post mail: ITHAM CACPD, Customs Lane, Kayts.**

# மணற் கொள்ளைகளுக்கு மணல்காட்டில் அத்திபாரம்

## கடந்தகாலக் கொள்ளையர்களே கைவரிசை என்கிறார் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஜூன் 21

மணற்காட்டில் மீண்டும் பெரிய மணற்கொள்ளைக்கு அத்திபாரம் இடப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் மணல் அகழ்வை மணற் கொள்ளையாக மாற்றி, ஏகபோக உரிமை கொண்டாடி ருசி கண்ட அரசியற் புள்ளிகளே புதிய ஆட்சியில் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக மீண்டும் கைவரிசையைக்காட்ட ஆரம்பித்துள்ளனர். மணல் விநியோகம் மீண்டும் அரசியல்வாதிகளினதோ, அரசியல் பின்புலம் கொண்டவர்களின் கைகளுக்கோ போவது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். தவறின் மணல் அகழ்வு பெரிய மணற் கொள்ளையாக விஸ்வரூபம் பெற்று யாழ். குடாநாடு மிகமோசமான சூழற்சீர்குலைவுகளை சந்திக்க நேரிடும். இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கின் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

மணற்காட்டு மணல் விநியோக முறையில் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பாக அப்பகுதி மக்கள் தமது எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றனர். இதையொட்டி பொ.ஐங்கரநேசன் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்,

மணல் அகழ்வுக்கான அனுமதியை கொழும்பு அரசே வழங்குகிறது. எனினும், ஏற்கனவே மணற் கொள்ளையால் ஏற்பட்டிருந்த சூழற்பாதிப்புகளைக் கருத்திற் கொண்டும் நியாயமான விலையில் மக்களுக்கு மணல் கிடைக்கும் பொருட்டும் வடக்கு மாகாண சபையில் அமைச்சராக நான் பதவியேற்றதும் சில ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. வடமராட்சி கிழக்கின் மணல் அகழ்வு மற்றும் மணல் விநியோகம் தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்டச் செயலர், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர், அப்பிரதேச மக்கள் ஆகிய முத்தரப்பினருடனான பலசுற்றுப் பேச்சுக்களின் பின்னர் மணல் அகழ்வு அப்பிரதேச கிராம மட்டப் பொது அமைப்புகளிடமும், மணல் விநியோகம் யாழ். மாவட்ட பாரவூர்திகள் கூட்டுறவுச் சங்கத்திடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் காலப்பகுதியில் மணல் வியாபாரத்தின் வருவாயில்பெரும்பகுதி அந்தப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கே பயன்படுத்தப்பட்டது. அதேபோன்றே, கிராமமட்ட அமைப்புக்கள் பெற்ற வருவாயின் கணிசமான பகுதி பிரதேச செயலரின் நெறிப்படுத்துகையில் அப்பிரதேசத்தின்; அபிவிருத்திக்குப் பயன்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், புதிய ஆட்சியில் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியுள்ளது.

மணற்காட்டு கிராம அபிவிருத்திச்சங்கத்திடம் இருந்து மணலைப் பெற்று நேரடியாக விநியோகித்து வந்த யாழ் மாவட்ட பாரவூர்திகள் கூட்டுறவுச் சங்கத்தினர் புறந்தள்ளப்பட்டு இடையே அரசியல் பின்புலத்துடன் கூடிய இடைத்தரகுப் பாரவூர்திப் போக்குவரத்துப் புகுந்து கொண்டுள்ளது.

இவர்களிடமிருந்தே யாழ்மாவட்ட பாரவூர்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் மணலைப் பெற்று விநியோகிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். மேலும், அனுமதிக்கப்பட்ட அளவை விடவும் பாரிய அளவில் மணல் அகழ்வு இடம் பெற்றிருப்பதும் தெரியவந்துள்ளது. கடந்த காலத்தில் மணற்கொள்ளை தொடர்பான புள்ளிவிவரங்களை வெளியே பகிர்ந்து கொண்டமைக்காக குடத்தனையைச் சேர்ந்த தேவராசா கேதீஸ்வரன் என்ற சூழற்பற்றாளர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இது ஏற்படுத்திய அச்சம் காரணமாக இப்போதும் இடைத்தரகர்களாகப் புகுந்து கொண்டுள்ளவர்களின் பின்னணி குறித்து வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்க அப்பகுதிமக்கள் அஞ்சும் சூழ்நிலையே நிலவுகிறது.

மணல் அகழ்வு, மணல் விநியோகம் அரசியல்வாதிகளின் கைகளுக்குப் போய்ச்சேர்வது தொடர்பாகத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டும் மக்களுக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் எப்போதும் பக்கபலமாக நிற்கும். இவர்களின் போராட்டத்திற்குத் துணை நிற்கும் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் எதுவாயினும் அவர்களுடன் சேர்ந்து போராடவும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தயாராகவுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5)

## இராணுவம்...

சிப்பாயை தள்ளி வீழ்த்தியதாலேயே துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தெரிவிக்கும் இராணுவத்தினர், மணல் அகழ்ந்த 4 பேரை பிடித்து தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து நீண்ட நேரத்தின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை காணப்பட்டது. கெற்பேலியைச் சேர்ந்த திரவியம் இராமகிருஷ்ணன் (வயது-24) என்பவரே இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

### மணல் அகழ்வு

காரைக்காடு குளப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடைபெற்று வருகின்றது. இதனையடுத்து அதற்கு அண்மையாகவுள்ள நாற்சந்தியில் இராணுவத்தினர் சிறிய காவலரண் அமைத்து தங்கி வருவது வழமை.

'நேற்று மாலை உழவியந்திரத்தில் வந்த 4 பேர் மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ளனர். உயிரிழந்த இளைஞர் அங்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். இராணுவத்தினர் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவர்களை மடக்க முற்பட்டபோது அவர்கள் தப்பிச் சென்றனர். மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் தப்பித்துச் செல்லும் போது அவரை மறித்த சிப்பாயை தள்ளி வீழ்த்தி விட்டுச் சென்றுள்ளார். இதன் பின்னர் சிப்பாய் அவரை நோக்கிச் சுட்டுள்ளார்' என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, சட்டவிரோதமாக மணல் அகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டு இராணுவத்தினர் மடக்கிப் பிடிக்க முயன்றபோது 4 பேர் தப்பிச் சென்றனர். அவர்களை இராணுவத்தினர் சிறிது நேரத்தில் பிடித்துள்ளனர். அதற்கிடையிலேயே இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடைபெற்றிருக்க வேண்டும் என்று பொலிஸார் கருதுகின்றனர்.

### உழவியந்திரத்தில் உடல்

இளைஞனின் மோட்டார் சைக்கிளின் எரிபொருள் தாங்கியில் துப்பாக்கிச் சூடு பட்டமைக்கான அடையாளம் காணப்படுகின்றது. இளைஞன் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பின்னர் அவரது உடலை, மணல் ஏற்றிய உழவியந்திரப் பெட்டிக்குள் இராணுவத்தினர் தூக்கிப் போட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தப்பியோடிச் சென்று இராணுவத்தினரிடம் மாட்டியவர்களில் ஒருவர் வெளியாள்களுக்கு தகவல் வழங்கியதையடுத்து அந்தப் பகுதிக்கு பொதுமக்கள் சென்றனர்.

அங்கு மணல் ஏற்றிய உழவியந்திரப் பெட்டியில் காயங்களுடன் இருந்த இளைஞனின் உடலை மீட்டு முச்சக்கர வண்டியில் பளை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அந்த நேரத்தில் மகேந்திரா வாகனத்தில் இராணுவத்தினரும் அங்கு வந்துள்ளனர். அவர்கள் முச்சக்கர வண்டிக்கு முன்பாகச் சென்று மருத்துவமனையை அடைந்தனர்.

மருத்துவமனைக்கு 4.30 மணியளவில் குருதி வழிந்தோட உடல் கொண்டு வரப்பட்டது. ஆனாலும் மருத்துவர்கள் எவரும் பளை மருத்துவமனையில் இருக்கவில்லை. இந்த நிலையில் இளைஞன் உயிரிழந்துள்ளான். இளைஞனின் தலையிலும், வலது தோள் மூட்டிலும் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தமைக்கான காயங்கள் காணப்படுகின்றன.

### போராட்டம்

இளைஞன் உயிரிழந்ததைத் தொடர்ந்து பளை மருத்துவமனைக்கு முன்பாக ஏ-9 வீதியை மறித்து இளைஞர்கள் போராட்டம் நடத்தினர். வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது. இதனையடுத்து கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜே.புஸ்பகுமார சம்பவ இடத்துக்கு வந்தார். போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சு நடத்தினார். அதன்போது, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 4 பேரையும் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்தனர்.

இதனையடுத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களை புஸ்பகுமார நேரில் சென்று பார்வையிட்டார். அவர்களை அலைபேசி வீடியோ அழைப்பு ஊடாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு காண்பித்ததைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

பதில் நீதிவான் சம்பவ இடத்தைச் சென்று பார்வையிட்டார். அத்துடன் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட இளைஞர்கள் கிளிநொச்சிதலைமைப்பொலிஸ்நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு வைத்தே அவர்களிடமும், இராணுவத்தினரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

### மருத்துவத் தரப்புக்கள்

"இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய இளைஞர் மருத்துவமனைக்குக் கொண்டு வருவதற்கு முன்னரே உயிரிழந்திருக்கலாம். மருத்துவமனையில் மருத்துவர் இல்லாதபடியாலேயே இளைஞர் உயிரிழந்தார் என்ற குற்றச்சாட்டை ஏற்க முடியாது. மருத்துவமனையில் இரு மருத்துவர்களே கடமையாற்றுகின்றார்கள். இளம் ஆண் மருத்துவருக்கு நேற்று விடுமுறை நாள். மற்றைய மருத்துவர் ஓய்வுபெற்ற பெண் மருத்துவர். 67 வயதான குறித்த பெண் மருத்துவர் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றுகின்றார். மருத்துவமனையில் ஒரேயொரு இளம் மருத்துவர் பணியாற்றும் காரணத்தால் அவருக்குத் துணையாக சுமார் 6 மாதங்களுக்கு மேலாக சம்பளம் இன்றி குறித்த பெண் மருத்துவர் பணியாற்றுகின்றார். நேற்றுக் காலை மருத்துவமனைக்கு வந்த அவர், மாலை 4 மணியுடன் பணிநிறைவடைந்து வீட்டுக்குச் சென்றிருந்தார். அதன் பின்னரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இளைஞர் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தார். இதையடுத்து பெண் மருத்துவர் மருத்துவமனைக்கு வர ஒன்றை மணிநேரம் சென்றுவிட்டது' என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ,5,6,22,26)

## இரு...

தொடர்பில் குறிப்பிடுகையில்,

நாட்டில் சட்டவிரோத செயல்களைப் படையினர் கட்டுப்படுத்தி வருகின்றனர். இந்தநிலையில், சட்டவிரோத செயலில் ஈடுபட்ட குறித்த நபர் தப்பிச் செல்ல முயன்றபோது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிக்சூடு உடலின் எந்தப் பகுதியைப் பதம் பார்த்தது என்று எனக்குத் தெரியாது. அவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்ற தகவல்தான் எமக்குத் தெரியும். அதன் பின்னர் என்ன நடந்தது என்பது தெரியாது, என்றார். (ஒ,5,22)

## இராணுவம்...

படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இளைஞரின் தலையில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது எனவும், இது திட்டமிட்ட படுகொலை எனவும் அவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். சட்டவிரோதமாக மணல் ஏற்றினார்கள் என்றால் அவர்களைத் துரத்திப் பிடித்து கைது செய்திருக்கலாம். தப்பிச் செல்ல முயன்றிருந்தால் அவர்களின் காலுக்குக் கீழே சுட்டிருக்கலாம் எனவும் உறவினர்கள் மேலும் கூறியுள்ளனர்.

இது தொடர்ப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்னவிடம் 'உதயன்' வினவியபோது, இது திட்டமிட்ட படுகொலை என்பதை மறுத்துள்ளார்.

முகமாலையில் உழவு இயந்திரத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டு தப்பிச் சென்றவர்கள் மீதே துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் நேரில் சிக்கும்போது பொலிஸார் அல்லது இராணுவத்தினரின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அந்த உத்தரவுகளை மீறி அவர்கள் தப்பிச் சென்றால் சுடுவதில் தவறு இல்லை' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

படையினரின் துப்பாக்கிச்சூடு குறி தவறி குறித்த இளைஞரின் தலையைப் பதம் பார்த்திருக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார். எனினும், இது தொடர்பில் விசாரணை இடம்பெறுகின்றது எனவும், விசாரணையின் பின்னரே முழுமையான தகவல்களைக் கூற முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ,5,22)

# இரணைமடுக் குளத்தின் கீழ் 3ஆவது போக பயிர்ச்செய்கை

## ஆராய்ந்தது கிளிநொச்சி மாவட்டச் செயலகம்

**கிளிநொச்சி, ஜூன் 21**

**கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் நீரைப் பயன்படுத்தி ஏற்கனவே இருண்டு போகப் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படும் நிலையில், மீதமுள்ள நீரில் மூன்றாவது போகப் பயிர்ச் செய்கையாக உப உணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஆராய்ந்துள்ளது.**



இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இரணைமடுத் திட்ட முகாமை அலுவலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்றது. கடந்த சித்திரை மாதத்தில் கிடைத்த மழைவீழ்ச்சியால் மீதப்படுத்தப்பட்ட நீரைப் பயன்படுத்தி மூன்றாவது போகமாக உப உணவுப்பயிர்ச் செய்கை மேற்கொள்ள வேண்டும் என கூட்டத்தில் மாவட்டச்செயலர் கேட்டுக்கொண்டார். எதிர்வரும் 19/7/2020 வரை நெற்செய்கைக்கு நீர் வழங்க வேண்டி உள்ளதால் 10/8/2020 தான் அறுவடை முடிவடையும். இதன்பின் வயலைப் பண்படுத்தி 2 1/2 மாத உப உணவுப் பயிரை மேற் கொள்வதாயின் கார்த்திகை மாதம் உப உணவுப் பயிரின் அறுவடை வரும். இக் காலம் மழை காலமாகையால் அறுவடை செய்ய இயலாது. கால போகச் நெற்பயிர்ச் செய்கையும் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்படும் என அந்தக் கலந்துரையாடலில் அதிகாரிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதனை அடுத்து சிறுபோக நெற்செய்கை வயல் நிலத்தில் உப உணவு செய்வது தவிர்க்கப்பட்டது. இரணைமடு நீரைப் பயன்படுத்தி சிறுபோகச் செய்கை மேற்கொள்ளாத இடங்களை இனங்கண்டு உபஉணவுப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள கருத்துக்களை முன்வைக்குமாறு மாவட்டச் செயலரால் கோரப்பட்டது. கோரக்கன்கட்டு, பரந்தன் நகர், குமரபுரம் பகுதிகளில் உள்ள மானாவாரி வயல் நிலங்களில் வேலி அடைத்து உப உணவுப் பயிர்ச் செய்கையை முன்னெடுக்கலாம் என கிளிநொச்சி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கூறியமையைத் தொடர்ந்து எதிர்வரும் திங்கட்கிழமை (22/6/2020) அப் பகுதி கமக்காரர் அமைப்புகளை அழைத்து இறுதித் தீர்மானம் எடுப்பது என மாவட்டச் செயலர் தெரிவித்தார். இதனை அடுத்து அந்தக் கூட்டம் நிறைவடைந்தது. (ப-222)



# திருவையாறு ஜம்போ உற்பத்தி பார்வையிட்டனர் அதிகாரிகள்

கிளிநொச்சி, ஜுன் 21

விவசாயத்தை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி திருவையாறு மற்றும் கனகாம்பிகைக் குளம் ஆகிய கிராமங்களில் 'லங்கா ஜம்போ' நிலக்கடலை விதை உற்பத்தி செயற்படுத்தப்படுகின்றது. இதை மாகாண பிரதிதிப் பணிப்பாளர் சுபதம நாதன், கண்காணிப்பு மதிப்பீட்டு அலுவலர் குரூஸ், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பாடவிடய அலுவலர், பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள் போன்றோர் களப்பயணம் மேற்கொண்டு பார்வையிட்டனர். விவசாயிகளின் கருத்துக்களையும் கேட்டறிந்தனர். (கு-222)

# படிவங்களைப் பூர்த்திசெய்து கட்சி அலுவலகம் ஆரம்பிக்கலாம்

## மன்னார் மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் தெரிவிப்பு

மன்னார், ஜுன் 21

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்சிக் காரியாலயம் திறப்பதற்கான ஆவணங்கள் மன்னார் மாவட்ட தேர்தல் திணைக்களத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. எனவே கட்சிகளின் வேட்பாளர்கள், செயலாளர்கள் இப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி கட்சி காரியாலயங்களை ஆரம்பிக்கமுடியும். இவ்வாறு மன்னார் மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் ஜே.ஜெனிற்றன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வன்னி தேர்தல் தொகுதியான மன்னார் மாவட்டத்தில் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இம்முறை 88 ஆயிரத்து 842 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன் வன்னி தேர்தல் தொகுதியில் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 405 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களும் உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்தில் இம்முறை 76 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இம்முறை சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரைக்கு அமைவாக சுகாதாரத்தை பேணி கட்சி காரியாலயங்கள் அமைக்கப்பட வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுக் காரணமாக தேர்தல் கட்சி காரியாலயங்களில் ஒன்றுகூடி சீட்டு விளையாடுதல், அருகருகே இருந்து ஒன்றுகூடி வேறு செயல்பாடுகளில் ஈடுபடுகின்றமை போன்ற செயல்பாடுகள் தவிர்க்கப்பட்டுள்ளன- என்றார். (ஜ-60)

# துடுப்பாட்ட மத்தியஸ்தராக கிருபாகரன் தெரிவு

## வடகிழக்கிலிருந்து தெரிவாகும் முதலாவது நபர்

யாழ்ப்பாணம், ஜுன் 21



இலங்கை துடுப்பாட்ட சபையால்; யாழ்ப்பாணம் மாவட்ட கிரிக்கெட் மத்தியர் சங்கத்திலிருந்து ஒருவர் தரநிலை 3 இற்கு உள்வாங்கப்பட்டுள்ளார். வடமராட்சியை சேர்ந்த ரி.கிருபாகரன் என்ற யாழ்ப்பாணம் மாவட்ட கிரிக்கெட் மத்தியர் சபையின் முன்னிலை மத்தியஸ்தரே இவ்வாறு உள்வாங்கப்பட்டுள்ளார்.

இலங்கை துடுப்பாட்ட சபையின் மத்தியஸ்தர் தகுதி நிலை பிரிவு 3 பரீட்சையில் சித்தியடைந்த ரி.கிருபாகரன் யாழ்ப்பாணத்தின் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சார்பில் நாட்டின் பிரபல பாடசாலைகள் பங்கேற்கும் முக்கிய போட்டிகளில் நடுவராக கடமையாற்றிவந்த நிலையில் தற்போது துடுப்பாட்ட மத்தியஸ்தர் சபையால் பிரிவு 3 இற்கு உள்வாங்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை தபாலகத்தின் உத்தியோகத்தராக கடமையாற்றும் கிருபாகரன் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார். (ஒ.5,20)


**வேலைக்கு தேவை**

Tamil, English Typing தெரிந்தவர்கள் வேலைக்குத் தேவை.

**S.S.Computer - நல்லூர்**

**076 050 3863, 076 311 9485**

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

வெளி நாடுகளுக்கான பொதிகள் கடிதங்கள் சேவை DHL மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**திருமுருகன் கொம் நெற் (Pvt)Ltd**

321, K.K.S. Road, Jaffna

கிளைகள்:நெல்லியடி, திருநெல்வேலி, கொழும்பு. **0777 554 528**

**தேவை**

சுன்னாகத்தில் இயங்கும் இருசக்கர முச்சக்கர ஊர்தி பராமரிப்பு நிலைத்திற்கு அலுவலக உத்தியோகஸ்தர் தேவை. ( வசிப்பிடம் சுன்னாகம் விரும்பத்தக்கது)

தகைமை: ஆங்கிலம் எழுத வாசிக்க, கணினி கையாள

**075 653 4006**

**CAR விற்பனைக்கு**

**Toyota Prius 4th Generation 2016.**

**Doctor Used.**

**13,000Km Used.**

**077 630 9947**


# வேட்பாளர் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜுன் 21

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக்குழு 2 ஆகப் போட்டியிடும் மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் தேர்தல் அறிக்கை வெளியீடும், வேட்பாளர் அறிமுக நிகழ்வும் இன்று நடைபெறவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி வீதியில உள்ள றிம்மர் மண்டபத்தில் இந்நிகழ்வு நடை பெறவுள்ளது. (ஐ)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.